[illegible] 1922-23

வால்யூம் 13 நம்பர் 11

SL
R65 ∞2||, M11D.
N23·13·11
186730.

953

ரேஜிஸ்தர் எம். 916.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்
வேதாந்த விசாரம் செய்யும்
ஓர் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை.

நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி.ஏ., பி.எல்.,
பத்திராதிபர்.

ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.
ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்யதர்ஸி.

ஸபையின் 1922—1923ஹு ஆகஸ்டுமீ.

ஸம்புடம் 13.] ருதிரோத்காரிஹு ஆடிமீ [ஸஞ்சிகை 11.

1. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... 375

2. காமமும் மோக்ஷமே மோக்ஷமும் காமமே.
ஸௌ. ஸ்ரீநிவாஸாசார்யர். ... 383

3. ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞை.
காரப்பங்காடு - சிங்கராசாரியார். ... 391

4. திருவாரூர் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.
பி. ஏ. திருவேங்கடத் தய்யங்கார். ... 395

5. ஸ்ரீரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹம். ... 397
பண்டித பூஷணம் வித்வான் சே. நரஸிம்மாசாரியர்.

6. இரண்டாந்திருவந்தாதி.
வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் ... 407

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்ஸியால்
ப்ரசுரம் செய்யப்பட்டது.

மதராஸ்: கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

வர்ஷச்சந்தா ரூ. 3—0—0] [ஸஞ்சிகை 1 அணா4.

## புஸ்தக விமர்சம்.

காதம்பரீ - லகுகத்யஸங்க்ரஹ ரத்னமாலை - இரண்டாவது ரத்னம். இஃது எளிய ஸம்ஸ்க்ருத நடையில் காதம்பரீக் கதையிலிருந்து ஸ்ரீ. உ. வே. அபிநவபட்டபாண ரா. வெ. க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமியால் ஸங்க்ரஹிக்கப்பட்டது. ஸம்ஸ்க்ருத பாஷையைப் பயிலும் சிறுவர்களுடைய உபயோகத்துக்காக இந்த ஸ்வாமி ஏற்கெனவே இயற்றியிருக்கும் வேமபூபாலசரிதம் முதலியவை ப்ரஸித்தங்கள். ஸம்ஸ்க்ருத பாஷையின் பெருமை குன்றுமலிருக்கும் பொருட்டு ப்ராசீன காவ்யங்களாகிய காதம்பரீ, ஹர்ஷசரிதம், தசகுமாரசரிதம் முதலியவைகளையே அவைகளின் மொழிகளைக் கொண்டே எளியநடையில் புஸ்தகங்களாக எழுதுவது மிகவும் ச்லாக்யமான வழி என்பதை மறுப்பாருமுண்டோ? ஆனதுபற்றி இதையும் இவருடைய மற்ற க்ரந்தங்களையும் பாலர்கள் விசேஷமாய் உபயோகப்படுத்தி க்ருதார்த்தர்களாவார்கள் என்று நம்புகிறோம். இப்புஸ்தகத்தின் முடிவில் ஸம்ஸ்க்ருத அரும்பதங்களுக்குத் தமிழர்த்தங்கள் சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தேவபாஷா பாலபாடம்.—இதுவும் இந்தஸ்வாமியாலேயே இயற்றப்பட்டது. ஸம்ஸ்க்ருத பாலபாடங்கள். ஏற்கனவே அநேகம் வெளிவந்திருப்பினும், இப்புத்தகத்தில் ஒரு தனி விசேஷமிருக்கின்றது. அது, ஓரெழுத்து ஈரெழுத்து முறையால் பாடங்களைச் சேர்த்திருப்பதும், கூட்டக்ஷரங்களைக் கூடியவரையில் முதலில் உபயோகப்படுத்தாம லிருப்பதும், நிற்க, ஸ்ரீராமாயணம்; காதம்பரீ, மாளவிகாக்நிமித்ரம் முதலிய ப்ராசீன காவ்யங்களிலிருந்தே பதவாக்யங்களையும் கதைகளையும் எடுத்து இப்புத்தகத்தை ரசனை செய்திருப்பது தான். இதனுல் மிகுந்த ப்ரயோஜன முண்டென்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். வாக்யங்களில் காடின்யமொன்றும் காணப்படவில்லை. இதில் உபாத்தியாயர்களுக்கு ஆங்காங்கு காட்டியிருக்கும் குறிப்புகள் மிகவும் உபயோக மானவையே. தமிழ் ப்ரதிபதங்களை எங்கும் சேர்த்திருப்பதும் ஒரு விசேஷம்.

3. கற்பகம். ப்ரதிமாதமும் புதுச்சேரியில் ப்ரசுரிக்கப்படும் இந்தத்தமிழ் மாதாந்தரப் பத்ரிகையின் ப்ரதியொன்று நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. கற்பகமென்று பெயர் வைத்ததற்கிணங்கத் தற்காலம் ஜநங்கள் அபேக்ஷிக்கக்கூடிய, மதம், ராஜ்யவிஷயம், பொதுக்கல்வி, வியாபாரம் முதலிய எல்லாத்திசைகளிலும் இப்பத்திரிகை உபயோகப்படவேண்டுமென்று இதன் நிர்வாஹகர்களின் எண்ணம் இதிலடங்கியிருக்கும் பலவித விஷயங்களால் தெரியவருகிறது; மதவிஷயங்களில் இதில் காணப்படுமெல்லாவற்றையும் நாமங்கீகரிக்க முடியாதாயினும், இப்பத்ரிகையின் அபிநிவேசத்தைப் பலமுடையதாக்கப் பகவான் அருள்புரிவாராக வென்று நாம் போற்றக்குறையில்லை.

பத்ராதிபர்.

இங்கிலீஷ் கல்வியின் ஸம்ஸ்காரத்தினால் அறிந்த அர்த்தத்தை எழுதிவிட்டார்! இம்மாதிரி கணக்கற்ற உதாஹரணங்களிருக்கின்றன. இப்பொழுது செந்தமிழ்ப் பத்ரிகையின் சென்ற வைகாசியீ ஸஞ்சிகையில் 'கிடாம்பி ஸ்ரீமாந்' னென்று கையொப்பமிட்டு, '4000 - பிரபந்தங்களின் சாற்றுப்பாக்கள்' என்றெழுதியுள்ள ஆராய்ச்சியொன்றைச் சுருங்கப் பராமர்சிப்போம்.

*　　*　　*　　*　　*

திவ்யப்ரபந்தங்கள் ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸம் புராணம் பாஞ்சராத்ரம் முதலிய வைதிக சாஸ்த்ரங்கள் வெளியிடும் பொருள்களையே பக்தி அநுபவ ரூபமாக வெளியிடுகின்றனவாகையால், அவற்றை வெறும் தமிழ்ப்புலமையொன்று கொண்டே யறியமுடியாதென்பதையும், குருமுகமாக ஸம்ப்ரதாய முறையிலேயே கற்கவேண்டுமென்பதையும், அடிக்கடி தீபிகை எடுத்துக்காட்டியிருக்கிறது. அவ்வழியை யநுஸரியாதவர்களுக்கு எங்கும் முரண்பாடுகளும், விரோதமான அர்த்தங்களும் ஏற்படுவது திண்ணம். மேலெடுத்த செந்தமிழ்வ்யாஸத்தின் துவக்கத்திலேயே 'ப்ரபந்தங்களினுடையவும், பதிகங்களினுடையவும் இறுதியிற் காணப்படும் சாற்றுப்பாசுரங்கள்' என நமது நண்பர் கூறியதே இதற்கு உதாரணம் இவர் இறுதிப்பாசுரங்கள்தான் சாற்றுப்பாசுரங்கள் என்று நினைத்தார் போலும்! பகவதாராதனத்தில் வேதம் முதலியவைகளைப் படித்து மந்த்ரபுஷ்பம் ஸமர்ப்பிவிப்பதற்கிணங்க, ப்ரபந்தத்தின் சாற்றுமறையில் அநுஸந்திக்கப்படும் பாட்டுகளுக்கே சாற்றுப்பாட்டுகளென்று பெயர். இதுவேயன்றி இறுதியிலிருப்பதினால் அதற்குச் 'சாற்று' என்னும் பெயர் இல்லை. சில ப்ரபந்தங்களில் சாற்றுப்பாக்கள் இரண்டுமூண்டு. திருவந்தாதிகள் முதலிய 'ப்ரபந்தங்களில் சாற்றுப்பாக்கள் காணப்படவில்லை' என்றிவர் கூறுவது ஸம்ப்ரதாயம் அறியாமையைக்காட்டும். பகவத் ஸந்நிதியில் எந்த ப்ரபந்தத்தை அநுஸந்தித்தாலும் கடைசி இரண்டு பாட்டுகளைச்சொல்லித் திருத்துழாய் அல்லது புஷ்பம் ஸமர்ப்பிவித்துச் சாற்றுமறை செய்வார்கள். 'அமலனாதிப்பிரான்' ப்ரபந்தத்தில் திருப்பாணாழ்வார் நாமாங்கனம் முதலியவையின்றியே சாற்றுப்பாவிருப்பதை நோக்குக இப்படி நாலாயிரமென்னப்பட்ட 24 - ப்ரபந்தங்களுக்கும் (நமது நண்பர் 23 - என்கிறார். ராமாநுஜநூற்றந்தாதியைச் சேர்த்துத்தான் 4000 - கணக்காகிறது - பக்.) ஸ்ரீதேசிகப்ரபந்தத்துக்கும் மற்றுமுள்ளவைகளுக்கும் 'சாற்றுப்பாக்கள் உண்டே.

*　　*　　*　　*　　*

சாற்றுப்பாக்கள் அந்தந்த ஆழ்வார்கள் இயற்றியவைதானா என்னும் ஆராய்ச்சியில் புகுந்து, அல்லவென்று தீர்மானித்து, 'அவை பெரும்பான்மையும் நாதமுனிகள் காலத்திலும் அவர் காலத்துக்குப்பின் இராமானுஜர் காலத்துக்கு முன்பும் ஏற்பட்டவை யென்று கொள்ளுதல்தகும்' என முடித்தார். இப்படித்தள்ளியவைகளில் திருவாய்மொழிகள் ஒவ்வொன்றிலும் 11 வதானா பாக்களும் சேர்கின்றன வென்று இவர் துணிவு, இதற்கு ஆதாரமாக அவர் சொல்வதைக் கேட்போம்.



நாதமுனிகள் காலத்தில் திவ்ய ப்ரபந்தங்கள் லுப்தமாயிருந்தனவென்றும் அப்பொழுது ப்ரகாசித்து வந்த திருவாய்மொழி 'ஆராவமுதே' என்பது மட்டுமே யென்றும் அப்பொழுது இத்திருவாய்மொழியில் இருந்தது 10 - பாட்டுக்கள் தான் என்றும் குருபரம்பரை நூல்கள் கூறுகின்றனவாம். ஆனதுபற்றிச் சாற்றுப்பாக்கள் பின்னருண்டாயிருக்கலாமென்பர். குருபரம்பரை நூல்களைப் பராமர்சித்தால் நாதமுனிகள் அத்திருவாய்மொழியின் இறுதியில் 11-வது பாட்டில் 'ஆயிரத்துளிப்பத்தும் மழலைதீரவல்லார்' என்றிருப்பதைச் செவியுற்றே திருவாய்மொழி ஆயிரமென்றறிந்து அவ்வாயிரத்தையுங் கண்டுபிடிக்க அவாவுற்றது விளங்கும்! இதை அவர் வேறு வழியில் அறிந்ததாகக் கதையில்லை.

'திருக்குருகைப்பிரான் பிள்ளான், திருவாய்மொழியின் சாற்றுப்பாக்கள் சடகோபர் அருளியவை யல்லவென்று கொண்டாரெனத் தோன்றுகின்றது' என்று முதலில் சொல்லிவிட்டு நமது நண்பர் முடிவில் '6000-படி வ்யாக்யானம் - (பிள்ளானருளிச்செய்தது) - ஏற்பட்டபொழுது அது இப்பொழுது காணப்படும் சாற்றுப்பாக்களுடன் அமைந்திருந்தன' வென்றும் எழுதுகிறார். இவர் தீர்மானம் எங்ஙனமென்பது? ஒன்றுமட்டும் காட்டுவோம். முதற்பாட்டின் வ்யாக்யானத்தின் அவதாரிகையில், 'ஆழ்வார் ................................................................ அவனை யநுபவித்தபடியே பேசுகிறார்' என்றமாதிரியே ஒவ்வொரு பாட்டின் வ்யாக்யானத்தையும் 'அருளிச்செய்கிறார்' 'என்கிறார்' என்றே தலைக்காட்டிக் கடைசித் திருவாய்மொழியின் 11-வது பாட்டின் வ்யாக்யானத்தையும் 'தம்முடைய அபேக்ஷிதம் பெற்று விடாய்தீர்ந்த பத்திவற்றை யறிந்தார், அயர்வறு மமரர்களுக்கும் மேற்பட்டாரென்கிறார்' என்று முடித்துத் திருவாய்மொழி 1102 - பாட்டுகளும் ஆழ்வாராலேயே அருளிச்செய்யப்பட்டவை என்பதை ஸ்தாபித்தருளினர் - என்பதே. நடுவிலும் 'இப்படி அபிநிவேசத்தோடு என்னோடு கலந்தருளின கல்வி மெய் என்கிறார்' என்றும், 'என்னைப்போலே பிரிந்து நோவுபடவேண்டா' என்னும் சில திருவாய்மொழிகளின் 11-வது பாட்டுகளுக்கு இவர் வ்யாக்யானம் அருளியிருப்பதையும் கண்டுகொள்வது.

*　　*　　*　　*　　*　　*

இனி இவர் ப்ரபந்தங்களுக் குட்புகுந்து தமது தீர்மானத்துக்கு ஆதரவு கண்டுபிடிக்கும் ப்ரகாரங்களைப் பார்ப்போம். சாற்றுப்பாக்கள் ஆழ்வார்களாலியற்றப்பட்டவை யென்பதற்கு மூன்று வகையான 'இழுக்குகள்' ஏற்படுகின்றனவாம். அவையாவன, (1) அவைகளில் தற்புகழ்ச்சி காணப்படுவதும், அது ஆழ்வார்களுடைய ஸ்வபாவத்துக்குப் பொருந்தாமலிருப்பதும் (2) சாற்றுப்பாக்கள் உண்டான காலத்தில் ஆழ்வார்கள் தொன்மை பெற்றிருந்தது (3) பாட்டுகளின் கணக்கில் முரண்பாடு, என்று.

சாற்றுப்பாசுரங்களில் ஆழ்வார்களுடையவும், திருமொழிகளைப்பற்ற பலச்ருதியும் அவர்கள் அருளிச்செயல்களினுடையவும் பெருமைகளும்திருநாமங்களு

ம் காணப்படுவதைத் தற்புகழ்ச்சியென்று நம் நாட்டுக் கவிசமயங்களை யறிந்தவர்கள் சொல்லார்கள். கவிகள் தங்களுடையவும் காவ்யங்களினுடையவும்புகழ்வைச் சொல்லவேண்டு மென்றே விதியுள்ளது. அவைகளைப் படர்க்கையிலேபேசுவதும் தொன்றுதொட்டுள்ள காவ்யவழக்கு. தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்' என்றபடியே தொண்டர்கள் பாடிக்களித்து பகவத்குணனுபவம் பண்ணுவதற்கென்றே பகவத் பாகவத கைங்கர்ய ரூபமாக ஆழ்வார்கள் க்ருபா பரவசர்களாய்ச் சுறந்த ப்ரபந்தங்களைப்பற்ற இந்தந்யாயத்தை விஸ்தரிக்கவேண்டுவதில்லை. இப்புகழ்களின் அபிப்ராயமே தற்புகழ்ச்சியல்ல. ஆனல் விவேகிகள் இந்த ப்ரபந்தங்களின் விஷய கௌரவத்தையும், அவற்றை இயற்றியவர்களுடைய பெருமையையு மறிந்து ஆதரவுடன் அவைகளை யனுஸந்தித்து க்ருதார்த்தர்களாகும் பொருட்டுச் சொல்லப்படு மவையாதலின் அவை பிறர் நன்மைக்காகவன்றே அமையும்! சிறியதிருவடி லங்கையிற் கட்டியம் கூறியபோது 'தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய ராமஸ்யாக்லிஷ்ட கர்மண: । ந ராவண ஸஹஸ்ரம் மே யுத்தே ப்ரதிபலம் பவேத் ॥' (கஷ்டமின்றிஎதையும் முடிக்கவல்ல கோஸலேந்திரனுகிய ராமனுடைய தாஸனுகும் நான்! ஆயிர மிராவணர்களும் எனக்கு யுத்தத்தில் எதிர் பலமாக மாட்டார்கள்) என்று தன்னைப்புகழ்ந்தது, பகவத்சேஷத்வ ஜ்ஞாந அனுபவத்தால் வந்த ஸாத்விக அஹங்காரத்தின் பேச்சாகையால் அது தோஷமாகாது, என்னும் உதாரணத்தைக் கவிகள் பற்றுவது நம்தேசத்தில் உபநிஷத்து புராணம்முதற்கொண்டு எப்பாஷையிலும் எக்காலத்திலும் உண்டு. த்யாகராஜய்யர் கீர்த்தனங்கள் முதலியவற்றிலும் இதைக்காணலாம். 'கூழாட்ப்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினிற் புகுதலொட்டோம்' 'நின்னுள்ளேனைப் பெற்ற நன்மை இவ்வுலகினில் யார் பெறுவார்', 'கொடுமை செய்யும் கூற்றும் என் கோலாடி குறுகப்பெறா', 'அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி', 'நாவலிட் டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள் மீது,' செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்,' 'எனக்கினியார் நிகரகலாவானத்தே 'என்னகுறையெனக்கே' என்று ப்ரபந்தங்களினிடையிடையே காணப்படுவதெல்லாம் தற்புகழ்ச்சி யாகாதே? 'அஞ்சிறைய' என்னும் திருவாய்மொழியின் 11 வது பாட்டின் உரையில் 'எம்பெருமானுடைய............... கல்யாணகுணங்களையும்........திவ்யசேஷ்டிதங்களையும் காலதத்வமெல்லாம் பேசினுலு மாராத அபிநிவேசத்தை யுடையவனுப் அந்த குணத்தையே தாரகமாக உடையனுன குருகூர்ச்சடகோபன் சொன்ன ஸர்வஜன போக்யமான ஆயிரத்தில் ......' என்று ஆழ்வார் சுபாவத்தை அவர் பாடியபடியே பிள்ளான் அருளிச்செய்தார். இது இத்தற்புகழ்கள் எத்தகையன என்பதை நன்றாய்க் காட்டுகின்றது. திருப்பாவையும் நமது நண்பர் நினைசின்படி தற்புகழ்ச்சியைப்பேசும்—பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத்தமிழ்மாலை முப்பதும்—என்பதடங்கியசாற்றுப்பாட்டைச்சேர்த்தன்றோ முப்பதாகிறது? இதற்கென்ன மறுமொழி?

தற்புகழ்ச்சி, நைச்யம் (humility) மனத்தூய்மை முதலியவற்றைப்பற்றி ஆங்கிலமுறைகளிற் பயின்றவர்களுக்கு விசித்திர மனப்பான்மைகளுண்டாகின்றன. நமது நண்பர் மதுரகவிகளைப்பற்றிப் பேசியிருப்பதே உதாரணம். 'நம்பினேன் பிறர் நன்பொருள்தன்னையும், நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்



என்று 'மெலிந்தமனதுடன் தன்மையொருமையில்' பேசின இந்த ஆழ்வாரின் சுபாவத்துக்குக் கடைப்பாசுரத்தில் 'மதுரகவி சொன்னசொல் நம்புவார்பதி வைகுந்தம் காண்மினே' என்பது 'விரோதமாயமைந்துள்ளது' என்றார். அப்பாட்டிலேயே 'குருகூர் நகர் நம்பிக் கன்பனாய் மதுரகவி சொன்ன' என்றிருப்பதைக் கண்டாரோ? ஆழ்வார் அநுக்ரஹத்தால் தாம் வெளியிட்டிருக்கும் ப்ரபந்த மென்றன்றோ அதன்மஹிமையைக் காட்டினார்! இதுதற்புகழா, தன்னடக்கமா? மெலிந்தமனதைக்காட்டின பாட்டிலேயே 'சதிர்த்தேன் இன்றே' என்று தாம் பெருமையடைந்ததைப் பேசினது புகழல்லவோ?

நம்மாராய்ச்சிக்காரரின் மற்றோர் பேச்சைக் காண்மின். நாச்சியார்திருமொழியில், 11. வது பதிகத்தில்

'செம்மை யுடைய திருவரங்கர் தாம்பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்
தம்மை யுகப்பாரைத் தாமுகப்பார் என்னும் சொல்
தம்மிடையே பொய்யானல் சாதிப்பாரா ரினியே'

என்றதின் 'பொருத்தம் சரியாய் விளங்கவில்லை' என்கிறார். அஃது இவரிடத்தில்உண்மையே. ஆயினும் அறிந்தவரிடம் கேட்காமல்மனம்போனபடி ஆராய்ந்து,' ஆண்டாள் அரங்கரையுகந்ததுபற்றி, அரங்கரும் ஆண்டாளையுகந்த வார்த்தையை விட்டு சித்தர் கேட்டிருப்பர் என்பது இதற்கும் பொருளாயின் ஆண்டாளே இதைக் கூறியதாகக் கொள்ளுவது தகாத தாகும்' என்று எழுதத் துணிந்தார்! வழுவாதமுறையில் அர்த்தம் கேட்டவர்களுக்கு, இப்பாசுரம் ஆசார்யநிஷ்டையை வெளியிடுகிறதென்றும், இங்கு 'மெய்ம்மைப் பெருவார்த்தை' யென்றது பகவான் 'ந த்யஜேயம் கதஞ்சந' (ஒருக்காலும் கைவிடேன்), 'மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:' (விடுவிக்கக் கடவேன் நீ சோகப்படாதே) என்றபடி சரண்யனருளிச்செய்த அபயப்ரதான வாக்யங்களென்றும் 'விட்டுசித்தர்கேட்டிருப்பார்' என்றது, இப்படிப்பட்ட ரஹஸ்யங்களாகிற சாஸ்த்ரார்த்தங்களை ஆசார்ய முகமாகவே க்ரஹித்து பகவானைச் சரணம்புகவேண்டுமென்ற விதியைக்காட்டுகிறதென்றும், 'தம்மையுகப்பாரைத் தாமுகப்பார்' என்றது, வேதாந்தங்களில் 'யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்' என்றபடியே குணங்களிலீடுபட்டு பகவானிடத்தில்நிரந்தரபக்தியைப் பண்ணி அவனைவசீகரிக்கிறவர்களுக்குப்பகவானே தன்னைக்காட்டிஅவர்களை உஜ்ஜீவிப்பிக்கிறான், என்ற பொருளென்றும் 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்றுஅரங்கரிடத்தில்துணிந்த ஆண்டாளது காமமானது நிரதிசய பகவத்பக்தி யென்றும் தெளிவுண்டாகும். இப்படிப்பாசுரத்தின் பொருளையறிந்தால் பதிகத்தில் இதன் பொருத்தம் விளங்கும்.

திருமாலை பாடிய தொண்டரடிப்பொடி யாழ்வாரும் திருப்பள்ளியெழுச்சி பாடியவரும் ஒருவரேயல்லவாம். இதைப்பற்றிய ஆராய்ச்சியை ஈண்டு அவர் எழுதவில்லை. எழுதும்போது. பராமர்சிப்போம் திருபள்ளி யெழுச்சி பாடியவர் தொண்டரடிப்பொடியார் தானும். அதன் சாற்றுப்பாட்டும் அவருடையதேயாம். ஆயின் அதில் 'உன்னடியார்க் காட்படுத்தாய் பள்ளியெழுந்தரு

ளாயே' என்ற மாதிரியே, 'திருமாலையில் 'அளியன் நம்பையலென்னா ரம்மவோ கொடிய வாறே' என்று அலற்றினவர் அவ்வாழ்வார் தாமே என்ற புராதனக் கொள்கைக்கு ஒரு பங்கமும் காணோம். திருமாலைக் கடைசிச் சாற்றுப்பாட்டிலும் 'துளவத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி' என்றிருப்பதையும் திருப்பள்ளி யெழுச்சி யிறுதிப்பாவில், 'தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி' என்றிருப்பதையும் சேர்த்து நோக்குக.

திருப்பல்லாண்டின் 11-வது பெரியாழ்வாருடையதுதான் என்று நமது நண்பர் தேரியதற்குச் சந்தோஷிக்கிறோம். அதுமட்டுமல்ல, 12-வது பாட்டும் சாற்றுப்பாட்டு என்பதை இங்கு அவர்க்கு அறிவிக்கிறோம். 12-வதில் படர்க்கையில பேசினது சரிதானென்பது கீழ்ச்சொல்லியவையினால் தெளிவாகும். அது காரணம் பற்றியே, 12-பாடல்களுக்குள் முரண்பாடு இருக்கிறதென்ன முடியாது.

*　　　*　　　*　　　*　　　*

சாற்றுப்பாக்களில் ஆழ்வார்களின் தொன்மை (முற்பாடு) சொல்லப்படுவதால் அப்பாக்கள் பின்னருண்டானவையென்கிறார். 'தொல்புகழ்விட்டுசித்தன்', 'வழுவாத தொல்புகழ் வண்குருகூர்ச்சடகோபன்', 'முந்தையாயிரம்', என்றமாதிரியான வாக்கியங்களை இதற்கு உதாரணமாக்குகிறார். இத்தகைய வசனங்களில் 'தொல்புகழ்' என்பது ஸ்வாபாவிக சேஷத்தாலே, ஸங்கேதரியான காரணமொன்றுமின்றியே, ஆத்மஸ்வரூபத்துக்குள்ள ஏற்றத்தை அநுபவித்து வெளியிடும் ப்ரபாவமென்று பிள்ளான் முதலிய ஆசார்யர்களால் விளக்கப்பட்டிருக்கிறது. அன்றியே, தற்புகழ்ச்சி யென்னும் இழுக்கற்ற இவ்வசனங்களால் இப்பாசுரங்களின் வக்த்ருவைலக்ஷண்யத்தை (ஆக்கினவர்களின் மேன்மையை) வெளியிட்டு, இவை ஓதுவோர்க்கு உஜ்ஜீவகங்களாயிருப்பதையும் காட்டும். இவற்றை இயற்று முன்னரே இவர்கள் புகழ்வாய்ந்தவர்களாக விருந்தனர் என்னவுமாம். முந்தையென்றது, திருவாய்மொழியும் வேதத்தைப்போல் அநாதியென்றும் வேதரிஷிகளைப்போல் ஆழ்வாரும் முன்னரேயிருந்த திருவாய்மொழியை ஸாக்ஷாத்கரித்தார் என்றும் ஸம்ப்ரதாயார்த்தத்தைச் சொல்வதாகும். ஆழ்வாரை பட்டர் 'ருஷிம் ஜுஷாமஹே' (ரிஷியை நமஸ்கரிக்கிறோம்) 'என்றும் ஸ்ரீதேசிகன் '[illegible] ஸம்ஹிதாம் [illegible]' (வேதத்தின் மற்றொரு ரூபமான - த்ராவிட - ஸம்ஹிதையை ஸாக்ஷாத்கரித்தவரை) என்றும் அருளிச்செய்தார்கள்.

இப்படியே இதைப்போன்ற மற்றவசனங்களுக்கும் ஸாம்ப்ரதாயிகங்களான அர்த்தங்களைக்கேட்டுத் தெளியவேண்டும்.

எனவே இவற்றினால் சாற்றுப்பாட்டுக்கள் அந்தந்த ஆழ்வார்களுடையன அல்லவென்ன வொண்ணாது.



இவருடைய மூன்றாவது ஆராய்ச்சிப்பொருளும் பயனற்றதேயாகும். இவரே திருவாய்மொழி ஆயிரமென்பது 1002 - பாட்டுக்களென்கிறார். 2-க்கு ஆனது 102 - க்கும் ஆகட்டுமே? வடமொழியிலும் தென்மொழியிலும் சதகம், பஞ்சாசத், தசகம், என்று பெயர்பெற்ற நூல்களில் 100, 50, 10, என்ற தொகைகள் அதிகப்பட்டதில்லையோ? தொகை வித்தியாஸப்படுவது இலக்கண விரோதமென்பாரைக் காணோம். இங்கு முதல் திருவாய்மொழி வ்யாக்யானத்தில் பிள்ளான் 'தமிழறிசைகாரர் பத்தர் பரவும்படி நிரதிசயகல்யாணமாயிருப்பன வெம்பெருமானுக்கு அபர்யந்தமாக வேண்டுமென்று தம்முடைய அபிநிவேசத்தாலே ஆயிரமென்றருளிச்செய்கிறார்' என்று 11 - வது பாட்டில் ஆழ்வார் உள்ளத்தை வெளியிட்டிருப்பதை நமது நேயர் நோக்குவாராக. 'அபர்யந்த' மென்றது நிரம்பச் சொல்லியல்லது நிற்கவொண்ணாத பகவத்பக்தியின் பெருக்கைச்சொன்னது. மொத்தத்தில் 1000 - பாட்டுக்கள் தான் சொல்வதாகச் ஸங்கல்பித்தபடியன்று. ஆயிரமென்றால் கணக்கற்றது என்றபடி. 'பேருமோராயிர' மென்று ஆழ்வார் தாமே பாடியதற்கும் இதே பொருள். 'ஸஹஸ்ர ஶீர்ஷா [illegible] ஸஹஸ்ராக்ஷ ஸஹஸ்ரவாக்' என்ற புருஷஸூக்தத்தின் அர்த்தமே இதற்கு நிதர்சநம். இதைத்தான் கீதையில் விச்வரூபாத்யாயத்தில் 'அநேக வக்த்ர நயநம்' (பல வாய்களையும் கண்களையுமுடையவன்) என்றது. திருப்பாவைசாற்றுப்பாட்டு உள்படத்தான் முப்பது ஆகிறதென்று முன்பே குறிப்பிட்டோம். ஆகையால் 'செய்யுட்கணக்கில் முரண்' கண்டு நெடுங்காலமாய் நாதமுனிகள் பிள்ளான் முதலியவர்களால் ஆதரிக்கப்பட்டு வந்து பின்னர் ஸ்ரீதேசிகனாலும் (650 - வருஷங்களுக்கு முன்னரே நிர்ணயித்து வைக்கப்பட்ட திருமொழிகளின் தொகையிலக்கங்களை மாற்றப்பார்ப்பது ஸாஹஸமாகும். ஸ்ரீமந்நாதமுனிகளே இப்போது இருக்கும் நிலைமையில் ஆழ்வார்களின் திருமொழிகளை வகுத்து அநுஸந்தான க்ரமங்களையும் ஏற்படுத்தினராகையால், சாற்றுப்பாக்களும், ஆழ்வார்களுடையனவல்லவென்றாலும், நாதமுனிகளுக்கு முன்னரேயிருந்தனவென்பதையும் குருபரம்பரைகளைக்கொள்ளும் நம்மாராய்ச்சிக்காரரும் மறுக்கமுடியாது.

பெரியாழ்வார் திருமொழிகளில் சிலவற்றில் 'சாற்றுக்கவியைச் சேர்த்து 11 - பாக்களிருக்க, சாற்றுப்பாசுரம் அப்பதிகத்தில் 10 - செய்யுள்களே உள' (இப்பத்தும், ஈரைந்தும்) என்று பேசுவதும், சில பதிகங்களில் 10-பாக்களுக்குள்ளேயே சாற்றுப்பாக்களிருப்பதும், அவையெல்லாம் ஒருவராலியற்றப்படவில்லை யென்பதைக்காட்டுமாம்! இவ்வாதம் இவருக்கனுகூலமா, அல்லது நமது பக்ஷத்தை ஆதரிக்கின்றதா என்பதைத் தீபிகை நண்பர்களே தீர்மானிக்கட்டும்.

நேரான ஆராய்ச்சிவேண்டுமென்பதை நாமும் ஒப்புவோம். ஆனால் நமது சிற்றறிவைப் பெரியதாக்கி மஹான்களான பூர்வர்களுடைய வார்த்தைகளைக் கூசாமல் திரஸ்கரிப்பது ஆராய்ச்சியாகாது. அபசாரமேயாகும். ஆராய்ச்சிக்காகப் புதிய சாதனங்களைக் கொள்ளும் நாம் முன்னோர்கள் சொன்னதை ஏன் முறைப்படியறிந்து கொள்ளக்கூடாது? நமது நண்பரே பெரியதிருமொழியில் 'வைரமேகன்' என்ற பெயரைக்கண்டு, அப்பெயரையுடைய ஒரு சாளு

க்ய அரசன் காலத்துக்குப் பின்னர் இவ்வாழ்வாரிருந்தவரென்று ஒருவர் தீர்மானித்ததைக் குறித்தார். 'வைரமேகன்' என்பது ஓர் அரசவம்சத்தின் பழைய குடிப்பெயர் என்று 700 - வருஷங்களுக்குமுன் ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்ததையும், 'வைரம்பற்றின மேகம்போன்ற திருமேனியையுடைய பெருமாள்' என்று பின்னர் ஸ்ரீபெரிய பரகாலஸ்வாமி அருளிச்செய்ததையும் லகுவாய்த்திரஸ்கரித்தாவது அவ்வாழ்வாரை நவீனராக்குவதா ஆராய்ச்சி?

*           *           *           *           *

திருவாய்மொழிமுழுவதும் ஒரு அந்தாதியென்பது புராதனக் கொள்கை. ப்ரபந்தத்தின் கடைப்பாட்டின் கடைமொழி முதற்பாட்டின் முதல்மொழியாக வேண்டுமென்பதும், முன்பாட்டின் இறுதிச்சொல் அடுத்ததின்முதல் பதமாக வேண்டுமென்பதும் அந்தாதிக்கு முக்யலக்ஷணம். நமது ஆராய்ச்சியர் கொள்கையை ஏற்றால் ஆழ்வார் இதைஅறியாரெனவே சொல்லவேண்டும்! அந்தாதி லக்ஷணம் 'இப்போது இருக்கும், நிலையில் சாற்றுப்பாக்களுடன் கூடினால்தான், திருவாய்மொழிக்குப் பொருந்துகிறதென்பதையாவது அன்னார் ஏற்பதும்விசேஷமே.' அவாவி லந்தாதிகளாலி வையாயிரமும்முடிந்த, அவாவிலந்தாதி யிப்பத்தறிந்தார்' என்றதினால் 100 பதிகங்களும் 10 பாக்களடங்கிய தனித்தனி அந்தாதிகளென்று அவர் மயங்குகிறார்போலும். 'சடகோபர் அதன் 100 பதிகங்களையும் 100 அந்தாதிகளாயமைத்ததை' என்கிறார். அப்பொழுது 11 வது பாட்டில்லாமல் ஒருபதிகத்திலும், ஒருபதிகத்திலிருந்து மற்றொருபதிகத்துக்கும், அந்தாதி லக்ஷணமும் பொருத்தமும் இல்லாதொழிவதைக் காணோம்.

'அந்தாதிகளாலிவையாயிரமும்' என்று பன்மையிற் பேசியிருப்பதற்கு 'அந்தாதிரூபங்களான ஸங்கல்ப்பங்களாயிரம் என்றபடி; இப்பாட்டுக்களாயிரமும் பரமபுருஷவிஷய நிரவதிக ப்ரீதி பரிவாஹங்களாய்ப் பிறந்த ஸங்கல்ப்பங்களாலே யுண்டானவை என்று வாக்ய தாத்பர்யம்', என்றும் 'ஸஹஸ்ர ஸங்கல்பாத் ஸ்ருஷ்டம் இதம்' (அந்தாதி ரூபமாய் இந்த 1000 - மும் ப்ரவர்த்தித்தது) என்றும் இப்படிகளில் பூர்வாசார்யர்கள் அருளிச்செய்திருப்பதைத் தீபிகையின் ஆப்தர்கள் அறிவார்களாக.

*           *           *           *           *

'பொய்கையாரின் திருவந்தாதி முதலிய ஐந்து திருவந்தாதிகள்'— என்றார் முதலில்; பின்னர் திருவிருத்தத்தைத் தனியாய்ப்பேசினார். ஸம்ப்ரதாயமறிந்தவர்கள் இதையுஞ்சேர்த்துத் திருவந்தாதிகள் ஆறென்பார். அவற்றில் இத்திருவிருத்தம் ஐந்தாவதாகத் தொன்று தொட்டுக் கணக்கிடப்பட்டிருக்கிறது. 'சாற்றுப்பாக்கள் காணப்படவில்லை' யென்ற முதல் நான்கு திருவந்தாதிகளிலும் ஆறாவது திருவந்தாதியிலும் அந்தாதி லக்ஷணம் அமைந்துள்ளது. இவற்றுக்கிடையிலுள்ள திருவிருத்தத்தின் கடைப்பாவைக் கழித்தால் இந்நூலுக்குமட்டும், அந்தாதிலக்ஷணமில்லையாகிறது. இதற்கென்ன சமாதானம்? இதன் சாற்றுப்பாவை மற்றவைகளின் கடைப்பாக்களோடு ஒத்துப்பார்த்தால் இது நூதனமென்பது விளங்குமாம்! இவர் ஒத்துப்பார்த்துக் கண்டதைச் சொன்னால் மறுமொழி கூறுவோம். அது வரையிலாவது எவரும் ஆழ்வார் இலக்கணமறிந்தவரென்றே கொள்ளக்குறையில்லை.

இனி விரிக்கிற்பெருகு மாதலால்இப்பராமர்சத்தை இங்கு முடிப்போம்.

ஸ்ரீ:.

# காமமும் மோக்ஷமே மோக்ஷமும் காமமே.

(முன்தொடர்ச்சி.)

மன்னுமறம் பொருளின்பம் வீடென்றுலகில்
நன்னெறி மேம்பட்டன நான்கன்றே நான்கினும்
பின்னையது பின்னைப்பெயர் தருமென்பதோர்
தொன்னெறியை வேண்டுவார் வீழ்கனியு மூழிலையும்
என்னுமிவையே நுகர்ந்துடலம் தாம்வருந்தித்
துன்னுமிலைக்குரம்பைத் துஞ்சியும் வெஞ்சுடரோன்
மன்னுமழல் நுகர்ந்தும் வண்டடத்தினுட் கிடந்தும்
இன்னதோர் தன்மையரா யிங்குடலம் விட்டெழுந்து
தொன்னெறிக்கட் சென்றாரெனப்படும் சொல்லல்லால்
இன்னதோர் காலத்தினையாரிது பெற்றார்
என்னவுங் கேட்டறிவதில்லை யுளதென்னில்
மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தினன்னடுவுன்
அன்னதோரில்லியினூடு போய்வீடென்னும்
தொன்னெறிக்கட் சென்றாரைச் சொல்லுமின்கள் சொல்லாதே
அன்னதே பேசுமறிவில் சிறுமனத்தாங்கு
அன்னவரைக் கற்பிப்போம் யாமே." என்றார்.

இதனால் அர்த்த வேதத்தில் சொல்லிய புருஷார்த்தங்கள் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று நான்காகும். கடைசியான மோக்ஷம் ப்ராக்ருதமான கடைசி தேஹம் முடிவதன் பின்னேவருவதாகும். 'தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே' என்கிறபடியே தானென்றபிமானித்தஇந்தசரீரத்தோடு அநுபவிக்க ப்ராப்தமாயிருக்க காலாந்தரத்திலும் தேசாந்தரத்திலும் அநுபவிக்கும் அநுபவமானது ஒருவன் தபஸ்ஸுபண்ணிக் கஷ்டப்பட மற்றொருவன் அதன் பலானுபவம் பண்ணுவதுபோலாகும். இதையும் வேண்டுவார்களோ? இதைவேண்டினாலும் காயக்லேசம் அதிகம். ஆனாலும் இன்னகாலத்தில் நான் மோக்ஷத்துக்குப்போனேன், அநுபவித்தேன் என்று நேரில்வந்து சொல்லுவாரொருவருமில்லை. சுகர் முக்தரானார் (வாமதேவர் முக்தரானார்) என்று சாஸ்திரத்தில் சொல்லுவாரே தவிர நேரில் மோக்ஷத்தைக் கண்டுவந்தவர் ஒருவருமில்லை. அப்படியிருந்தாலும் நாராயிரக்காதங்களுக்கு அப்பால் சஞ்சரிக்கும் ஸூர்யனுடைய தாபம் தாங்காத இவனை ஸூர்யமண்டலத்துக்கு ஸமீபத்தில் போய்

அதிலும் விசாலமான வழியின்றி ஒரு சிறு ஓட்டை வழியாய்ப்போய் அங்கும் வேறொரு சரீரம்பெற்று அநுபவிப்பான்! ஆகையால் சாஸ்திரத்தில் சொன்ன மோக்ஷத்தை நம்பினவர்களுக்கு நாம் சொல்லிக்கொடுப்போம், என்று கூறி இவ்வுலகத்தில் அர்ச்சாவதாரத்தில் அனுபவிக்கும் காம இன்பமே நிரதிசய புருஷார்த்தம் என்று நிகமித்தருளினர்.

சூடிக்கொடுத்த நாய்ச்சியாரும் (13-ம் திருமொழி. 7-8-9.)

வெற்றிக்கருளக் கொடியான்றன் மீ மீதாடாவுலகத்து
வெற்ற வெறிதே பெற்ற தாய்வேம்பேயாக வளர்த்தாளே
குற்றமற்ற முலைதன்னைக் குமரன் கோலப் பணைத்தோளோடு
அற்றகுற்றமவைதீர அணைய அமுக்கிக்கட்டீரே.
உள்ளே யுருகிநைவேனையுளளோ இலளோ என்னாத
கொள்ளைகொள்ளிக் குறும்பனைக் கோவர்த்தனனைக்கண்டக்கால்
கொள்ளும்பயனொன்றில்லாத கொங்கைதன்னைக் கிழங்கோடும்
அள்ளிப்பறித்திட்டவன் மார்பில் எறிந்தென்னழலைத் தீர்வேனே.
கொம்மைமுலைகளிடர் தீரக்கோவிந்தற்கோர் குற்றேவல்
இம்மைப்பிறவி செய்யாதே இனிப்போய்ச்செய்யும் தவம்தானென்
செம்மையுடைய திருமார்பிற் சேர்த்தானேலு மொருநான்று
மெய்ம்மையைசொல்லி முகநோக்கி விடைதான் தருமேல்மிகநன்றே,

என்றருளிச்செய்தார்.

சூடிக்கொடுத்தநாய்ச்சியாரானவர் திருத்துழாய் பரிமளத்தோடேகூட அங்குரிக்குமாறுபோல அவதாரம்தொடங்கி பால்ய யௌவனாவஸ்தைகள் தோறும் பரபக்திபரஜ்ஞாநபரம பக்திகள் வளர்ந்துவரப்பெற்று ஸ்த்ரீத்வத்தை ஆரோபித்துக்கொள்ளும் ஆழ்வார்களைக்காட்டில் ஸ்வாபாவிகஸ்த்ரீத்வத்தை உடையவராய்ப் பரமபுருஷனிடத்தில் பள்ளமடையாயிருப்பர். இப்படிப்பட்ட பகவத்விஷய ப்ராவண்யத்தினால் 'பஸ்யாஸஹஸ ஸ்வி ... யாபஸ்யா விநா' என்கிறபடி அவனைப் பிரியில் தரிக்கமாட்டாதவராய் கோபிகள் க்ருஷ்ண விரஹத்தை ஸஹிக்கமாட்டாமல் அனுகரித்தாற்போல் மார்கழிநீராடியும், நோன்புநோற்றும், காமபஜநம் முதலியவற்றைச் செய்தும் மானிடவர்க்குத் தாம் மனைவியென்று யாரேனும் எங்கேனும்பேசினாலும் வாழ நினைவில்லாத தன்மையராய், மற்றொருவர்க்கென்னைப் பேசலொட்டேன் மாலிருஞ்சோலை யெம்மாயற்கல்லால் என்றும் அவன்முகத்தன்றிவிழியேன் என்றும் தீர்ந்த காதலைவுடையராயிருப்பர். இந்நாய்ச்சியார் பகவானைவிச்லேஷித்தகாலத்தில் ஸமீபத்திலுள்ள தோழிகளைப்பார்த்து 'எம்பெருமான் அரையிலுடுத்த பீதாம்பரத்தைக்கொண்டு என்வாட்டம் தணியவீசுங்கள். துழாய்மலரை என்



கூந்தலில்சூட்டுங்கள் அவன் அதராம்ருதத்தையும் புள்ளாங்குழலின் துளையிற பெருகும் அம்ருதத்தையும் என்னை உண்பித்து என்முகத்திலும் தடவுங்கள். அவன்திருவடிபட்ட இடத்திலுள்ள புழுதியை என்சரீரத்தில் தடவுங்கள்' என்றுகூறிப் பின்னரும் தனக்கு ஸம்ச்லேஷம்கிடையாததால் அவனைப்பெற்ற தாயை இன்னாதாகி வளர்த்ததாயும் ஒழுங்காவளர்க்காமல் வேம்பாகவளர்த்தாள் என்று இருவரையும் வெறுத்துப் பின்னர், 'நமக்கென்ன வேம்பின் புழு வேம்பன்றியுண்ணாது' நமக்குஅவனே பரமப்ராப்யன், ஆகையால் அவனுக்கென்று உன்னித்தெழுந்த என்தடமுலைகளை நித்யயுவாவான அந்தக்கண்ணபிரானுடைய அழகாய்ப்பருத்த திருத்தோளோடு சேர்ந்துபதிந்து ஒன்றாகும்படி உஷையையும் அநிருத்தனையும் ஒன்று சேர்ச்சிறையிலிட்டதுபோல் கட்டிவிடுங்களென்று தோழிகளைப் பார்த்துக்கூறி அது கார்யகரமாகாதவாறே தன் கார்யம்தானே செய்துகொள்ளவேண்டுமென்று நினைத்துப் பின்னரும் உள்ளே மனமுருகி தர்மிலோபம் வரும்படிவருந்துகிற என்னை இருக்கிறாளோ இல்லைபோ என்று கூட விசாரியாமல் என்னிடமுள்ள நாண்மடம்பயிர்ப்பு அச்சம் என்கிற உள்ளணிகளையும் கைவளைமுதலிய புறவணிகளையும் கொள்ளைகொண்டு குறும்புசெய்வானும்பசுக்களைவிருத்தியாக்கிப் பெண்களைப்படுகொலை அடிக்கும் கோவிந்தனைக்கண்டால் என்கொங்கைகளை வேர்ப்பிடுங்காய்ப்பிடுங்கி அவன்மார்பிலெறிந்து யான்பட்டபாடு அவன்படும்படிச்செய்து என்துன்பம் தீர்ந்துவிடுவேன்' என்றும்பின்னரும், 'என்குழந்தை பசிதீர்ந்தால்போதும்' என்றுயாசிப்பவரைப்போல் 'என்கொம்மைமுலைகளிடர்தீர இப்பிறப்பில் ஓர் குற்றேவல் செய்யாமல் வேறு சரீரத்துடன் அநுபவிப்பது ஒருவன்பசிக்கு மற்றொருவனுக்கு அன்னமிட்டதுபோலாகும் ஆகையால் இப்பிறவியிலேயே தன் மார்பில் என்மார்பணையச் சேர்த்தானேல் நன்று. இல்லையாயின் பேதைநின்னைப் பிரியேன் பிரியில்தரியேன் என்று முன்போல் பொய் கூறாமல் என்றைக்காவதுமொருநாள் உன்னை நான் வேண்டேன்என்று என்முகத்தைப்பார்த்து மெய்மையைச் சொல்லிவிட்டால் மிகவும் நல்லது (இப்படியாவது முகத்தைப்பார்த்து அநுபவிக்க ஆசைப்படுகிறார் "பாவிநீ யென்றொன்று சொல்லாய் பாவியேன்காணவந்தே" என்பதுபோல்) ஸம்ச்லேஷம் விச்லேஷாந்தமாக முடியும் ஆகையால் அது துன்பம் தர்மிலோபம், பிறக்கும்படிவிடைகொடுத்துவிட்டால் மறுபடி துக்கமில்லை, என்றுபடும் துன்பங்களைப்பார்த்தால் அவை பர்த்தாவின் விரஹம்பொறுக்காத காமிநீவ்ருத்தாந்தமாய்க் காமசாஸ்திரத்தின் கவடுகளாயிருக்கின்றன. எனின், அல்பபுருஷனைக்காமிப்பது த்யாஜ்யமானகாமம். பரமபுருஷனைக்காமிப்பது உபாதேயமானகாமம். இந்தகாமந்தான் பக்தி. (பலமும் உபாயமும் இரண்டும் பக்தி ஆகலாமோ என்றால், 'மோக்ஷஸ்ய கிம் ந ஏவம் ஸக்திஸ் த்ருஷ்ணாஸ்வரூபம். மோக்ஷோபாயஸ்ய கிம் ந ஏவம் ஸக்திஸ் த்ருஷ்ணாஸ்வரூபம்' என்கிற வசநத்தின்படி கண்டுகொள்வது)

விச்லேஷத்தில் தோன்றும் உருவெளித்தோற்றம் பரஜ்ஞாநம் காமவிரஹம் முறுகி ஒருக்ஷணமேனும் தாங்கமுடியாதென்கிற தசை பரமபக்தி. காந்தனை அநுபவிக்கக்கொங்கை இன்றியமையாததுபோல் (கல்லாதான் சொற்காமுறுதல் முலையிரண்டுமில்லாதாள் பெண்காமுற்றற்று, என்னும் குறள் நோக்கத்தக்கது), பகவானை அநுபவிக்கப் பக்தி இன்றியமையாததால் பக்தியைக் கொங்கை என்கிறது, உலகத்துப்பொருள்களை நல்லது தீயது பார்க்கக் கண் எப்படி இன்றியமையாததோ அதுபோல் ப்ராக்ருத தோஷங்களைக்கண்டுவிடவும் பகவத்விஷயத்தைக்கண்டு பற்றவும் ஜ்ஞாநம் ஸாதநமாகையாலே ஜ்ஞாநத்தைக் கண் என்கிறது. பக்தி விருத்தியாக '[illegible]' என்கிறபடி ப்ராகிருதவிஷயஸங்கம் குறைவதுபற்றி கொங்கை வளரவளரத் தேயுமிடையை வைராக்யம் என்கிறது. இப்படி ஜ்ஞாந பக்தி வைராக்யங்களோடு கூடின சேதனர், [illegible] ஸம்ச்லேஷத்தில் தரித்தும் விச்லேஷத்தில் கலங்கியும் [illegible] அவன் நிர்வாஹகனுகத் தாம்நிர்வாஹ்யரா யிருக்கிறபடியாலே ஸ்த்ரீப்ராயர் என்கிறது. '[illegible]' என்றவை கண்டுகொள்வது.

8-ம் பத்து 7-ம் திருவாய்மொழியாகிய 'இருத்தும் வியந்து' என்னும் அகத்திலே ஸர்வேச்வரன் தன் தண்ணிமை பாராது தன்னுடன் கலந்தான். இவனை முன்பு பலபடியும் 'இதுவோ பொருத்தம்' என்று இழித்தோம் என்று லஜ்ஜித்து மோஹிதராய் இது ப்ரமஸ்வப்நாதிகளில் ஒன்றோ என்று எண்ணித் திருவடியினுடைய ராமநாம ஸங்கீர்த்தநத்தைக் கேட்ட ஜநகராஜன் திருமகள் '[illegible]' என்று தொண்டு

'[illegible]
[illegible]' என்று

சங்கித்தாற்போல் சங்கித்து மறுபடிதெளிந்தாற்போலே தெளிந்து ஆச்ரிதபாரதந்த்ரியத்தால் நம்மைப் பொருட்படுத்திக்கலந்தான் என்று ஹ்ருஷ்டரான ஆழ்வார், 8ம் திருவாய்மொழி 'கண்கள்சிவந்தில்' முதல்இரண்டாைப் பாட்டாலே அகாரவாச்யமான பகவத்ஸ்வரூபத்தை நிஷ்கர்ஷித்துச் சேஷத்தாலே மகாரவாச்யமான ஜீவஸ்வரூபத்தையும் நிஷ்கர்ஷித்து உகாரார்த்த விவரணம்பண்ணுங்காலத்தில் 9ம் திருவாய்மொழி 'கருமாணிக்கமலை' என்பதில்



[illegible] ।
[illegible] ॥ '

என்று வரன்தேடும்கணக்கிலே ஒருராஜகுமாரியை ஒருராஜகுமாரனுக் குநிச்சயித்து அதற்கான சிந்தைபண்ணுங்காலத்தில், ஸகியானவன் இந்நாயகியினுடைய அவயவசோபையையும் ஆலாபவிசேஷங்களையும் பார்த்தால் இவள் திருப்புலியூர் நாயனர்பக்கல் அத்யாஸக்தையாய் மானிடவர்க்கென்று பேச்சுப்படில்வாழாத தன்மையளாய் மநுஷ்யருக்குயோக்யையில்லாதவளாய் ஒழிந்தாற்போலே இராநின்ருள், என்று யோஜனைபண்ணித் துக்கித்தவளாய்க் கூறுவதுபோல் இராநின்றது. (இந்த ஒரு திருவாய்மொழிதான் ஸம்ச்லேஷத்தில் அங்யாப தேசம்

கருமாணிக்கமலைமேல் மணித்தடந் தாமரைக்காடுகள்போல்
திருமார்புவாய் கண்கையுந்தி காலுடையாடைகள் செய்யபிரான்
திருமாலெம்மான் செழுநீர்வயற்குட்ட நாட்டுத்திருப்புலியூர்
அருமாயன் பேரன்றிப் பேச்சிலளன்னை மீரிதற்கென் செய்கேனே.

என்று ஸர்வேச்வரனுடைய, இந்த்ரநீலபர்வதத்தில் அநேக ச்லாக்யமான தடாகத்தில் தாமரைக்காடு மலர்ந்தாற்போலுள்ள திவ்யாவயவங்களினுடைய ஸ்வாபாவிக ஸௌந்தர்யத்தில் மற்றொன்றறியாமல் ஈடுபட்ட படியையும்,

அன்னை மீரிதற்கென்செய்கே னணிமேருவின் மீதுலவும்
துன்னுசூழ் சுடர்ஞாயிறு மன்றியும்பல் சுடர்களும்போல்
மின்னுநீண்முடி யாரம்பல் கலன்தானுடை யெம்பெருமான்
புன்னையம்பொழில்சூழ் திருப்புலியூர் புகழுமிவளே.

என்று, மேருபர்வதத்தின்மேலே ஸஞ்சரிக்கிற ஸூர்ய சந்த்ர நக்ஷத்ரங்கள்போல் ப்ரகாசிக்கிற கிரீடஹாரகேயூராதி திவ்யாபரணங்களால் ஒப்பித்த ஒப்பனையழகிலீடுபட்டு போகஸ்தாநமான புன்னையம்பொழிலைப் புகழுந் தன்மையையும்,

புகழுமிவ ணின்றிராப்பகல் பொருநீர்க்கடல் தீப்பட்டெங்கும்
திகழுமெரியொடு செல்வதொப்பச் செழுங்கதிராழிமுதல்
புகழும்பொருபடையேந்திப் போர்புக்கசுரரைப் பொன்றுவித்தான்
திகழுமணிநெடுமாட நீடு திருப்புலியூர் வளமே. என்று,

[illegible] ।
[illegible] ॥

என்கிறபடியே ஜநகராஜன் திருமகளைப்போல் விரரஸத்துக்கு ஆசைப் பட்ட படியையும்,

ஊர்வளங்கிளர் சோலையும் கரும்பும் பெருஞ்செந்நெலும் சூழ்ந்து
ஏர்வளங்கிளர் தண்பணைக்குட்ட நாட்டுத்திருப்புலியூர்
சீர்வளங்கிளர் மூவுலகுண்டுமிழ் தேவபிரான்
பேர்வளங்கிளர்ந்தன்றிப் பேச்சிலளின்றிப்புனையிழையே.

என்று ஸமஸ்தலோகங்களையும் ப்ரளயமாகிய பெரிய ஆபத்தினின்றும், தப்பும்படி வயிற்றிலே வைத்து ரக்ஷித்த ஆபத்ஸகத்வத்தில் ஈடுபட்டபடியையும்,

புனையிழைகளணிவுமாடை யுடையும்புதுக்கணிப்பும்
நினையுநீர்மை யதன்றிவட்கிதுநின்று நினைக்கப்புக்கால்
சுனையினுட்டடந் தாமரைமலரும் தண்திருப்புலியூர்
முனைவன் மூவுலகாளியப்பன் திருவருள்மூழ்கினளே

என்று நிரதிசயமான ஐசுவர்யத்தில் ஈடுபட்டுநாயகனும் பாரிதோஷிகமாகக்கொடுத்த ஆடையாபரணங்களை அவள் உகக்குமாறணிந்து சரீரத்தில் ஆவிஷ்க்ருதமான உல்லாஸத்தோடு சுனையினுள் புனல்தருபுணர்ச்சியாய்த் திருவருளில் மூழ்கினபடியையும்,

திருவருள்மூழ்கிவைகலும் செழுநீர்நிறக்கண்ணபிரான்
திருவருள்களும் சேர்ந்தமைக்கடையாளம் திருந்தவுள
திருவருளருளாலவன்சென்று சேர்தண்திருப்புலியூர்
திருவருட்கமு கொண்பழத்ததுமெல்லியல் செவ்விதழே

என்று ஔதார்யகுணத்தில் ஈடுபட்டுச்சேர்ந்தமையைக் கோட்சொல்லும்படியான அதரம் இருக்கும் அழகையும்,

மெல்லிலைச்செல்வவண் கொடிப்புல்க வீங்கிளந்தாட்கமுகின்
மல்லிலைமடல்வாழை யீன்கனிசூழ்ந்து மணங்கமழ்ந்து
புல்லிலைத்தெங்கினூடு காலுலவும் தண் திருப்புலியூர்
மல்லலஞ்செல்வக்கண்ணன் தாளடைந்தாளிம்மடவரலே

என்று தாம்பூலவல்லியானது மஹா ப்ரணயினியாய் கமுகமரத்தை ஆலிங்கனம்பண்ண அக்கமுகும் ப்ரணயத்தாலே உடம்பு பூரிக்க இத்தைக் கண்டவாழை அந்த தம்பதிகளுக்கு உபசாரமாய் பழங்களையேந்தியும் காளாஞ்சிபோல் மடலைத்தாங்கியும்நிற்கத்தென்னைகள் இம்மூன்றினுடைய ப்ரணயித்வத்தையும்பார்த்து ஸகிகள்போல் தொடர்ந்துநிற்கத் தென்றல் திவ்யபரிமளத்தோடுவீசி கைங்கர்யம்பண்ண இவ்வாறு ஸ்தாவரங்களிலும் ப்ரணயித்வம்



வெள்ளமிடும்படியான திருப்புலியூர்நாயனுருடைய ப்ரணயித்வத்தில் ஈடுபட்டபடியையும்

மடவரலன்னை மீர்கட்கென்சொல்லிச் சொல்லுகேன்மல்லைச்செல்வ
வடமொழிமறைவாணர் வேள்வியுள்நெய்யழல்வான் புகைபோய்
திடவிசும்பிலமரர் நாட்டைமறைக்கும் தண்திருப்புலியூர்
படவரவணையான்றன்னுமமல்லாற்பரவாளிவளே.

என்று, ஸம்ஸ்கிருதவேதநிர்வாஹகரான வைதிகர்களுடைய யாகதூமமானது தேவலோகத்திற்சென்று அங்குள்ள விமாநகதரான தம்பதிகளுக்குப் போகம் பெருகும்படியான திருப்புலியூர் நாயனுருடைய வ்ருத்தவத்தையை ஆசைப்பட்டு ஆதிசேஷதல்பத்திலேறி மணந்து அப்படுக்கையழகை யவாய் புலற்றுகிறபலியையும்,

பரவாளிவணின்றிராப் பகற்பணிநீர் நிறக்கண்ணபிரான்
விரைவாரிசை மறைவேதிய ரொலிவேலையில் நின்றொலிப்பக்
கரவார்தடந்தொறும் தாமரைக்கயம் தீவிகைநின்றலரும்
புரவார் கழனிகள் சூழ் திருப்புலியூர்ப் புகழன்றிமற்றே.

என்று, எவனுடைய ஸம்பந்தத்தினாலே அவ்வூரிலுள்ளாரனைவரும் நிரதிசயபோக்யமான கானத்தையுடைய ஸாமவேதத்தை அத்யயநம் பண்ணி அதனர்த்த சிந்தனையும் பண்ணி தத்வவித்துக்களாயிருக்கிறார்களோ, அத்தகைய ஸர்வேச்வரனுடைய திருப்புலியூர்ப்புகழையல்லாமல் மற்றொன்றையும் புகழாதிருக்கிறபடியையும்,

அன்றிமற்றொருபாய மென்னிவளந்தண்டுழாய்க்கமழ்தல்
குன்றமாமணி மாடமாளிகைக் கோலக்குழாங்கள்மல்கித்
தென்றிசைத்திலதம் புரைக்குட்ட நாட்டுத்திருப்புலியூர்
நின்றமாயப்பிரான் திருவருளாமிவள் நேர்பட்டதே

என்று, பர்வதங்களுக்கு ஸமானங்களான நாயகபவநங்களை அநுபவித்துக் குட்டநாட்டுத்திருப்புலியூர் நின்ற மாயப்பிரான் திருவருளுக்குப் பாத்ரபூதையானபடியையும், தோழியானவள் எடுத்துக்கூறி ப்ரவ்ருத்தமான மணத்தை விலக்கத் தோழிவாசகம் பொய் என்று நினைத்து அவனுக்கு எவ்வளவு குணங்கள்இருந்தாலும் ப்ரவ்ருத்தமான விவாஹத்தைத்தடுக்கல் தகாதென்று மற்றவர்கள்கூற அன்றிமற்றொருபாயமென் இவளந்தண்டுழாய்க்கமழ்தல்' என்று, ராஜகுமாரனை அணையாதார்க்குக் கோயிற்சாந்து நாறுமோ, இவள்திருப்புலியூர் நாயனுர் திருமார்பிலணைந்து திருத்துழாய் பரிமளிக்கப்பெற்றுள், இவள் திருமேனியை முகருங்கள் என்று, அவர்களும் இசையவேண்டிய அடையாளத்தைச்சொல்லி திருப்புலியூர்நாயனுரோடே புணர்ந்துவிட்டாள். இனிமற்றையோர்க்கு மணம்பேசுவது தகாதென்றுகூறும் மணவிலக்குத்துறையாய் நிகமத்திலும்,

நேர்பட்டநிறை மூவுலகுக்கும் நாயகன்தன்னடிமை
நேர்பட்ட தொண்டர்தொண்டர்தொண்டர்தொண்டன்சடகோபன்சொல்
நேர்பட்ட தமிழ்மாலையா யிரத்துள்ளிவைபத்தும்
நேர்பட்டாரவர் நேர்பட்டார்நெடுமாற் கடிமைசெய்யவே.

என்று, இப்பாசுரங்களை அப்யாஸம்பண்ணினவர்களுக்கும் பகவத் கைங்கர்யமே புருஷார்த்தமென்று சாற்றியருளினர். இதுப்ரணவத்தில் உகாரார்த்த விவரணமாய், மேல் நமஸ்ஸில் அர்த்தஸித்தமான பாகவதசேஷத்வத்தை 'நெடுமாற்கடிமையிலும்' நாராயணசப்தார்த்தத்தை 'கொண்டபெண்டிரி' லுமாகத்திருமந்த்ரார்த்தத்தை அருளிச்செய்தார். இப்படி பரமபுருஷாநுபவத்தை பற்பல இடங்களிலும் ச்ருங்காரரஸமாக்கி அருளியபடியாலே ஓர் அதிகாரி விசேஷத்துக்குக் காமமும்மோக்ஷமே மோக்ஷமும்காமமே என்பது ஸ்புடமாயிற்று. ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான ஸ்வாமியும் உத்தர க்ருத்யாதிகாரத்தில்

'ப்ரணயி நிதிவப்ராப்தம் பத்மாஸஹ ப்ரியா ஸ்வஸித்தம் விஹந்தும் உபஹ
ராஜ்யேஷு க்ருஷ்ணாதிஷு ஜனித வைபவேன । ப்ராவ்ருதநயனா ஸஞ்ஜ:
ஸாம்யேஷு: ப்ரஸாதம் பரிஹாஸஜதே ப்ரஸ்ய விஹரதி வாடி ஸுரா
ப்ராபந்ந ஸமேதை: க்ருதேதை: ॥'

என்று அருளிச்செய்ததையும் கவனித்தால் திருமந்த்ரார்த்த நிஷ்டையுள்ளவனை நாயகியாக்கி நாயகவிச்லேஷஸமயத்தில் நாயகிஇருக்கும் இருப்பை அருளிச்செய்துள்ளார் என்பது விளங்குகிறது

இத்துணையும் கூறியவாற்றால் புருஷார்த்தபேதங்களும் அநுபவிக்கும் அதிகாரிபேதங்களும் காமத்துக்கு மற்றையமூன்றும் சேஷபூதமென்றும், அக்காமமும் பரமபுருஷவிஷயம் என்றும்கூறி இதற்கு ஏற்கத்திருக்குறளும் காமத்துப்பாலில் களவுகற்புக்களும் தூதுவிடப்பட்ட பக்ஷிகள் ஆசார்யர்கள் என்பதையும் கூறி நம்மாழ்வார் தத்வஹித புருஷார்த்தங்களை உபக்ரமத்தில் உபதேசித்து அதுகாமச்சுவையாய்ப்பெருகி கடைசியில் வீட்டின்பமாய் முடிந்திருப்பதும், திருமங்கைமன்னனும் சிறியதிருமடல் பெரியதிருமடல்களில் காமச்சுவை அர்ச்சாவதாரத்திலேயே ஆக்கினபடியும், ஆண்டாள் அநுபவமும், ஸ்வாபதேசங்களும் சேதனர் ஸ்த்ரீப்ராயராவதற்குக் காரணங்களும் 'கருமாணிக்கமலை' என்கிறதசகம் மணவிலக்குத்துறையாய் வேதாந்தார்த்தகர்ப்பமாய் முன்பின்னுள்ள திருவாய்மொழிகளோடு ஸங்கதிப்படுத்த திருமந்த்ரார்த்தமாய் இருப்பதும், ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த 'ப்ரணயிநிதிவ' என்ற ச்லோகமும் உபந்யஸிப்பவைகளை நோக்குங்கால் ஓர் அதிகாரி விசேஷத்துக்கு காமமும் மோக்ஷமே மோக்ஷமும் காமமே என்பது நலங்கக்காணப்படும்.

ஸௌ ஸ்ரீநிவாஸாசார்யன்
தமிழ்ப்பண்டிதர், மன்னார்குடி

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞை.

உபயஸம்ப்ரதாயஸ்தர்களாலும் திவ்ய தேசங்களிலும் அவரவர்களுடைய திருமாளிகைகளிலும் ராமாநுஜார்ய 'திவ்யாஜ்ஞா' என்னும் ச்லோகமானது ப்ரதிதினம் அநுஸந்திக்கப்படுகிறது. அந்த ச்லோகத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிற 'ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞை'யினுடைய வைபவமும் அதனுடைய ப்ரகாரமும், அதனுடைய அபிவ்ருத்தியை உத்தேசித்துச் செய்யவேண்டிய வ்யாபாரங்களும் நிரூபிக்கப்படுகின்ற

குருபரம்பரையானது அதில் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு * 'அஸ்மதாசார்ய வித்யாஸமாதூ:' என்றும், 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்றும்; சொல்லுகிறபடியே, ஸ்வாசார்யன் முதல் பெரிய பெருமாள் பரியந்தமாகவும் பெரிய பெருமாள் முதல் ஸ்வாசார்ய பர்யந்தமாகவும் நித்யமாக அநுஸந்திக்கப்படவேண்டியதாக இருக்கிறது அந்த குருபரம்பரையாகிற ஹாரத்துக்கு ஸ்ரீபாஷ்யகாரர் நடுவிலிருக்கிற நாயகரத்னம் போன்றவராய்த் தமக்கு முன்புள்ள ஆசார்யர்களுக்கும், பின்புள்ள ஆசார்யர்களுக்கும் ப்ரகாசகராக இருப்பர். இந்த விஷயத்தை ஸ்ரீதேசிகன், 'அபி நாதவ நாதஸ்ய ஸம்ஸ்ரீ நாத யதிராஜேந நிபந்தநாயகஸ்ரீ: । ஹந்த குருபங்க்திஹாரயஷ்டி: விபுதாநாம் ஹ்ருதயம் கமா விஹாதி ॥' யென்று அருளிச்செய்திருக்கிறார். அதின் அர்த்தம்:— ப்ராக்ருதனை ஸூர்யன், ப்ராக்ருதங்களான தாமரஸ புஷ்பங்களுக்கு ஒருஒரு காலங்களில் விகாஸத்தைப்பண்ணியும், வெளியிலிருக்கும் இருளை போக்கியும், ஆகாசத்திலேஉதித்து அஸ்தமித்தும்; ராத்ரியொடுகலசின பகலையும் பண்ணிக்கொண்டிருப்பர்; ராமாநுஜ திவாகரனோவென்றால் 'ராமாநுஜ திவாகரஸ் ஸதா யதி:' 'க்ருஷ்ணம் புஷ்டம் ஸநாதநம்' 'வர்ணாநாமபி வர்ணோஸௌ' யென்று சொல்லுகிறபடியே, ஸித்ததர்மமான ஸர்வேச்வரனு

* இஃது 1923ஞ ஜூலைமீ 29௳ திருக்கண்ணபுரத்தில் நடந்த திருவாரூர் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் வார்ஷிகமஹோத்ஸவத்தில் ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி அக்ராஸநாதிபதியாய்ச்செய்த உபந்யாஸத்தின் சுருக்கம். இவ்விஷயம் சென்ற மார்கழிமீ சென்னையில் நடந்த ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கத்திலும் இத்தஸ்வாமியால் உபந்யஸிக்கப்பட்டது.

கிற தாமரஸ புஷ்பத்துக்கு எப்போதும் விகாஸத்தைப்பண்ணியும், பாபமாகிற இருளைப் போக்கியும், பூமியில் உதித்து அஸ்தமனமில்லாதவராயும் இருப்பதாலும் 'பகல்கண்டேன்' என்று சொல்லுகிறபடியே, ராத்திரிகலசாத பகலை எப்போதும் பண்ணிக்கொண்டிருப்பதாலும், ப்ராக்ருத ஸூர்யனைக்காட்டிலும் விசேஷித்த ப்ரபாவத்தை உடைய ஸ்வாமி யதிராஜனால் ஏற்பட்ட நாயகரத்ந சோபையை யுடையதாயும் 'ஸஹோதரா ஸாக்ஷாத்ஹரி:' என்றும், சொல்லுகிறபடியே அருமை பெருமையுடைய ஜீவரத்நங்களாலும், 'முத்தமே எந்தன் மாணிக்கமே' என்று சொல்லப்படுகிற ஸர்வேச்வரனாலும், 'ஹிரண்ய வர்ணாம்' என்கிறபடி பொன்னுருவான பிராட்டியாலும் சேர்க்கப்பட்டிருக்கிறபடியாலும், நிரம்பவும் பெருமையை உடைத்தானதைப்பற்ற 'ஜ்யோதி' யென்று விசேஷிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட குருபரம்பரா ஹாரமானது விசேஷேண பத்யா: விபத்யா: என்னு, விசேஷஜ்ஞர்களான ப்ரபத்தி நிஷ்டர்களுக்கு நித்யம் ஹ்ருதயத்தில் தரிக்கப்படுமதாகையாலே 'ஹ்ருதயங்கம' மாக இருக்கும்.

சதுரனயிருப்பவனாலே முகமறிந்து கோர்க்கப்பட்ட முக்தாஹாரம்போல் 'தடக்கைச் சதுரன்' என்கிறபடியே சதுரனான ஸர்வேச்வரனாலே கோர்க்கப்பட்டதாகையாலே இந்த முக்தாஹாரம் நிரம்பவும் பெருமையுடையதாக இருக்கும், என்று இதினுடைய அர்த்தம்.

மேலும் 'தேரார் மறையின் திற' மென்று சொல்லுகிற பாசுரத்தின்படியே ஸர்வேச்வரன் பண்ணும் ப்ரதிபக்ஷ நிரஸநமானது 'தீயவரைக்கூராழிக்கொண்டு குறைப்பது' யென்கிறபடியே யத்நஸாத்யமாக இருக்கும். அப்படி அன்னியில்

ஸ்ரீபாஷ்யகாரர் செய்தருளுகிற ப்ரதிவாதி நிரஸநம், 'அப்போதொரு சிந்தை செய்தே' என்கிறபடியே ஸங்கல்பஸாத்யமாகையாலே, ஸுகரமாக இருக்கும். தவிர ஈச்வரனுக்குக் குணமில்லை, விபூதியில்லை, யென்று சொல்லுகிற குத்ருஷ்டிகளை நிரஸித்து 'கல்யாண கண ஸந்தோஹவதி மேதஸ்துத: பாபஹ்ருதங்கமஹ விலக்ஷணா ஜயதி ஹ்ருஷ்டமநாயதிர் நிதி:' என்றும் 'ஸர்வஸ்வ தீஷிதாஸி ந ஸாம்வஸ்ய ஸம்க்ஷேபம் | ஸ்வமரோ: வரிஸஹவே, ஹ்ராவே ஷேயீநா தவஷ்யதி: ||' யென்றும் சொல்லுகிறபடியே ஈச்வரனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை ஸ்தாபித்து அதிசயத்தை பண்ணுகிறவ



ராகையாலேயும், இப்படி விசேஷித்த ப்ரபாவத்தை உடைய ஸ்ரீஸ்வாமி ராமாநுஜார்யனுடைய திவ்யாஜ்ஞையானது பகவதாஜ்ஞையைக் காட்டிலும் உத்கர்ஷத்தை உடையது. அது எப்படியென்றால்:—

உபயவிபூதி நிர்வாஹகனான பகவானுடைய ஆஜ்ஞையானது உபயவிபூதிகளும் ஸங்கோசத்தை அடைந்திருக்கும். அதில் நித்யவிபூதியில் 'வானவர் நாடென்னும், ஆண்மின்கள் வானகம், ஆழியான் தமரே' ன்றும், சொல்லுகிறபடியே வானவர்க்கும் முக்தர்களுக்கும் நாடாகயிருக்கிறபடியாலேயும், ஈச்வரன் வானிளவரசாகையாலும், 'ஸ்ரீமதி விஷ்வக்ஸேந ந்யஸ்த ஸர்வஸ்வ ஸாம்ராஜ்யம்' என்றும் சொல்லுகிறபடியே ஸேனைமுதலியார் பிரம்பின் கீழும், திருவனந்தாழ்வான் மடியிலும் பெரியதிருவடியின் சிறகின்கீழும் 'மலராள் தனத்துள்ளான்' என்கிறபடியே பெரிய பிராட்டியாருடைய ஸ்தநதடங்களிலும் வளருகிற தத்வமாகையாலே ஸங்குசிதையாயிருக்கும். லீலாவிபூதியில் 'கவஜா நவி ஸாம்ஜேஸ்யா:' என்றும், 'வாமதே ராவணாதிவக்ஷ:' 'சூழ்நடியார் வேண்டினக்கால்' என்கிற பாசுரத்தின்படிக்கும், மிகவும் ஸங்குசிதையாயிருக்கும். அப்படி அன்னியில் ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞை உபயவிபூதியிலும் விச்ருங்கலமாக தடையின்றி நடைபெற்றிருக்கிறது.

நிலைவிபூதியில் 'வையம்மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே' என்கிறபடியே லீலாவிபூதியில் பெழுந்தருளியிருக்கச்செய்தேயும் ஸ்ரீஸ்வாமி ராமாநுஜார்யருடைய சிறுமுறிசெல்லும்படியாக இருக்கும்.

லீலாவிபூதியில் ப்ரதாநஸ்தலமான கோயிலில் இந்த திவ்யாஜ்ஞையின்படி நடந்துவருகிறதென்பது ஸர்வரும் அறிந்தவிஷயம்.

திருமலையிலும் 'அப்பனுக்குச் சங்காழி அளித்தருளும் பெருமான்' என்கிறபடியே திருவேங்கடமுடையானும் சங்க சக்ரப்ரதானம் செய்தருளினபடியாலும், திருக்குறுங்குடி நம்பி ஸ்வாமியினிடத்தில் மந்த்ரோபதேசத்தைப்பெற்று ஸ்ரீவைஷ்ணவ நம்பி என்று திருநாமம்பெற்று சிஷ்யராக இருப்பதாலும், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸ்ரீஆண்டாள் தங்கையாக இருப்பதாலும், திருநாராயணபுரத்தில் எம்பெருமான் செல்வப் பிள்ளை என்பதுவே நிருபகமாகஇருப்பதாலும், இராமாநுஜார்ய திவ்யாஜ்ஞை பரவியிருப்பது ஸுஸ்பஷ்டம்.

மேலும், ஸ்ரீஸ்வாமி உடையவருடைய உபதேச ப்ரபாவத்தால் இருந்திருந்தியடையப்போகிற ஸ்ரீவைஷ்ணவ ஸ்மிருதியைக்கடாக்ஷித்து ஆழ்வார்

பொலிக பொலிக' வென்றும், 'கலியும் கெடும் கண்டுகொள்மின்' என்றும், மங்களாசாஸநம் செய்திருப்பதாலும் க்ருஷ்ணனுடைய கீதோபதேசத்துக்கு முதல் பாத்ரமான அர்ஜுநன் அதைச் சிலகாலம் கழித்து மறந்துபோக, 'நூநமஶ்ரத்ததாநோஸி துர்மேதா ஹ்யஸி பாண்டவ । தந்மே ஸுமஹதப்ரியம்' என்று நிந்தித்து இருப்பதாலும், ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞையானது பகவதாஜ்ஞையைக்காட்டிலும் வீறுபெற்றதென்பது ஸுஸ்பஷ்டம்.

அந்த திவ்யாஜ்ஞையினுடைய ப்ரகாரம் ஸ்ரீபாஷ்யத்தை ஆசார்யமுகமாகக்கேட்டு ப்ரவசநம் பண்ணிப் பரமதநிராகரணத்துடன் ஸ்வமதஸ்தாபநம் பண்ணவேணுமென்றும்; பகவத் குணாநுபவத்தாலே அந்தக்கரணம் சிதிலமாகி, 'காலாடும், செஞ்சழியும், கண்சுழலும் என்கிறபடியே இருக்குமவர்களான ஆழ்வார்களுடைய திவ்யஸூக்திகளைக்கொண்டு காலக்ஷேபம் பண்ணவேணுமென்றும், அதிலும் அசக்தர்கள், உகந்தருளின நிலங்களில் வஸித்துக்கொண்டு அந்த எம்பெருமான்களுடைய கைங்கர்யங்களில் குறைவு நிறைவுகளை ஆராய்ந்து கைங்கர்யங்களைக்குறைவற நடத்தவேணுமென்றும்; அதிலும் அசக்தர்கள், ஸ்ரீவைஷ்ணவனுடைய அபிமாநத்தில் ஒதுங்கி வர்த்திக்கவேணுமென்றும்; இத்யாதிகள் இப்படி ஏற்பட்டிருக்கிற ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞாப்ரகாரங்களில் ப்ரதமகைங்கர்யமான தர்சநாபிவ்ருத்தியை உத்தேசித்து ப்ரதிவர்ஷமும் திவ்ய தேசங்கள்தோறும் ஜ்ஞாதாக்களைச்சேர்த்து உபந்யாஸங்கள் நடத்தி வந்ததோடு இந்த ஸம்வத்ஸரத்தில் 'தொண்டீர் உய்யும் வகைகண்டேன்', என்கிற பாசுரத்தின்படி ஸர்வேச்வரன் உகந்து எழுந்தருளியிருக்கிற இடமாயும், 'நின் திருவெட்டெழுத்தும் கற்று' யென்று திருமங்கையாழ்வாருக்குத் திருமந்த்ர உபதேசகஸ்தலமாயுமிருந்துள்ள திருக்கண்ணபுரத்தில் நடைபெற்றபடியால், 'ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்' மென்று பெரியோர்களுடைய மங்களாசாஸநமானது ஸபலமாகைதைப் பற்றி மிகவும் ஸந்தோஷிக்கிறேன். இனிமேலு மிந்த கைங்கர்யமானது செழிப்பாய் நடைபெற்று ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தம் ஓங்கித்தழைக்கும்படி ஸ்ரீசௌரிராஜப் பெருமாள் நடத்தி அருளுவர் என்று விச்வாஸித்திருக்கிறேன்.

[illegible] ।
[illegible] ॥

காரப்பங்காடு — சிங்காராசாரியார்.

# திருவாரூர் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

இச்சபையின் ஆறுவது வார்ஷிக மஹோத்ஸவம் ராக்ஷஸ ஆடிமீ 14உ (29—7—23) இல் நன்னிலம் ரயில்வேஸ்டேஷனுக்கு அடுத்த திருக்கண்ணபுரம் என்னும் திவ்யக்ஷேத்ரத்தில், ஸ்ரீசௌரிராஜப்பெருமாள் ஸந்நிதியில், காரப்பங்காடு ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமியின் அக்ராஸனத்தின் கீழ் வெகு விமர்சையாய் நடைபெற்றது. ஸபை காலை 8-மணி முதல் 12-மணி வரையிலும், மாலை $3\frac{1}{2}$-மணி முதல் 7-மணி வரையிலும் நடந்தது.

திருக்கண்ணபுரம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீக்ருஷ்ணனுக்கு உகப்பான (திருக்கண்ணமங்கை, திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி என்னும்) மூன்று திவ்ய தேசங்களாகிய ஹாரத்திற்கு, நாயக ரத்நம் போல் விளங்கும் திருக்கண்ணபுரத்திற்கு உள்ள உத்கர்ஷத்தை விஸ்தாரமாய் ப்ரதிபாதித்து, இந்த ஸபையின் வர்ஷோத்ஸவத்திற்கு எழுந்தருளிய வித்வான்களுக்கும், மற்றவர்களுக்கும், ஸவிசேஷமாய் ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமிக்கும் ஸ்வாகத நிவேதனம் செய்தார்.

கார்யதர்சியால், ஸபையைப்பற்றிய வர்ஷாந்த அறிக்கையும், ஸபையை ஆதரித்தவரும், ஸ்ரீமான் K. K. ஸ்ரீநிவாஸாசார்யர் (M. A., M. L., Dt. Munsiff) முதலானவர்களின் கடிதங்களும் வாசிக்கப்பட்டன. அதன்மேல் அக்ராஸநாதிபதி 'ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா' என்னும் விஷயத்தை அதிகரித்து, தேவாலயங்களிலும், திருமாளிகைகளிலும் ப்ரதிதினம் அநுஸந்திக்கப்பட்டுவரும் ராமாநுஜாஜ்ஞையின் ஸ்வரூபத்தையும், உத்கர்ஷத்தையும், விஸ்தாரமாய் ப்ரதிபாதித்து, அந்த ராமாநுஜாஜ்ஞை, பகவதாஜ்ஞையைக்காட்டிலும் மேலானதென்றும், உபயகலையாரும் ஏகமதியாய்ச் சேர்ந்து, பகவத்கைங்கர்யத்தில் ஈடுபடுவதே ராமாநுஜாஜ்ஞை என்றும் நிர்தேசித்து வெகு அழகாய் உபந்யஸித்தருளினர்.

பிறகு ஸ்ரீ. உ. வே. வேளுக்குடி சேஷாத்ரி அய்யங்கார் ஸ்வாமி "ஈச்வரனுடைய ஹிதகாரித்வம்" என்னும் விஷயமாய், முதலில் தத்வத்ரயத்தை ஸங்க்ரஹித்து, லோகத்தை உத்தாரணம் செய்யும் விஷயத்தில் பகவான் வெளியிடும் க்ருபாவிசேஷங்களை விஸ்தாரமாய் உபந்யஸித்தார்.

ஸ்ரீ. உ. வே. காடந்தேத்தி கோபாலாசார்யர் ஸ்வாமி "ஸ்ரீமத் ராமாயணதத்வார்த்தம்" என்னும் விஷயமாய் தத்வ ஹித புருஷார்த்தங்களின் ஸ்வரூபங்களை ஸங்க்ரஹித்து, ஸ்ரீமந்நாராயணனே தத்வமென்றும், அவரை அடைவதே புருஷார்த்தமென்றும், சரணாகதியே உபாயமென்றும் நிரூபித்து ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸ்ரீராமனை

ஸ்ரீமந்நாராயணனென்று கிஷ்கர்ஷிக்கும் ச்லோகங்களை உதாஹரித்து, ஸ்ரீராமனிடம் சரணாகதிசெய்த லக்ஷ்மணன், தேவர்கள், பரதன், ரிஷிகள், காகாஸுரன், விபீஷணர் முதலானவர்கள் அடைந்த ப்ரயோஜனங்களையும், மற்றுமுள்ள தத்வார்த்தங்களையும் எடுத்து உபந்யஸித்தார்.

காரப்பங்காடு ஸ்ரீ, உ. வே. வெங்கடாசார்யஸ்வாமி "ருக்மணீ கல்யாண" விஷயமாய்உபந்யஸித்து,ருக்மிணீ கண்ணனுக்குஎழுதியனுப்பிய ஏழு ச்லோகங்களின்தாத்பர்யங்களை விஸ்தாரமாய் உபந்யஸித்தார்.

மன்னார்குடி ஸ்ரீ உ. வே ஸ்ரீநிவாஸாசாரியஸ்வாமி "பகவத்ஸௌலப்யம்" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு பகவானுடைய பரத்வமும் ஸௌலப்யமும் சேர்ந்து லோகோஜ்ஜீவனத்துக்குச்செய்யும் அனுகூலத்தை, மேற்கோள்களுடன் விளக்கிக் காட்டினார்

ஸ்ரீமான் - சிரோமணி - T. S. ஸ்ரீனிவாஸய்யங்கார் ஸ்வாமியால் "பகவந்நாமவைபவம்" என்னும்விஷயம் அனேகபாசுரங்களைக்கொண்டு உதாஹரிக்கப்பட்டது.

உபந்யாஸங்கள் முடிவுபெற்றபின்மேல் அடியிற்கண்ட 3 தீர்மானங்கள் ஏகோபித்த மனதுடன் ஸபையோரால் நிறைவேற்றப்பட்டன :—(1) இந்தஸபையின் அங்கத்தினர்கள், இதரகிராமங்களுக்குச்சென்று, இந்தஸபையின் கார்யத்தையும் உபயோகத்தையும் உபந்யஸித்து, அதிகமெம்பர்களைச் சேர்க்கமுயற்சிக்கவேண்டும். (2) ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பாஷாந்தரப்படிப்புடன், நமது மதஸம்பந்தமாயும் படிப்பிக்கும்படி, அங்கத்தினர்கள் வற்புறுத்தவேண்டும். (3) வருஷத்துக்கு ஒருதடவையாவது இவ்விஷ்படிக்கும்பிள்ளைகளை ஸந்தியாவந்தனம் முதலானவிஷயங்களில் பரீக்ஷித்து இனும்கொடுப்பதற்கு இந்தஸபை ஏற்பாடுசெய்யவேண்டும்—என்று. கடைசியில், உபந்யாஸம்செய்து உதவியவித்வான்களுக்கு ஸபையின் நிர்வாஹத்துக்கு ஏற்றவிதமாய் ஸம்பாவனைகள் செய்யப்பட்டன. ஸபையின் கார்யதர்சி, ஸபையை அலங்கரித்த வித்வான்களுக்கும், இந்தஸபை இந்த க்ஷேத்ரத்தில் நடைபெறுவதற்கு உதவிசெய்த, இந்த திவ்யதேசவாஸிகளான ஸ்வாமிகளுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் உபசாரவசனம் கூறி, ஸபைமுடிவுபெற்றது.

பி. ஏ. திருவேங்கடத் தய்யங்கார்

(ஸபையின் நிர்வாஹ கம்மிட்டியின் அங்கத்தினர்.)

[illegible]

[illegible]

(தொடர்ச்சி.)

[illegible]

---

## ஸ்ரீரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹம்

### மூன்றாவது சரமச்லோகாதிகாரம்

(தொடரும்)

ராஜாவின் புத்ரர்கள் ராஜாவுக்கு அபராதம் செய்தாலும் வேலைக்காரர் களுக்குப்போல் அவர்களுக்கும் தண்டனை விதிக்கப்படுகிறதில்லையல்லவா? 'ராஜபுத்ரர்கள் அபராதத்துக்குப்போல் ப்ரபந்நர்களுக்கும் லகுவான தண்டனை' என்றும் சொல்லப்படுகிறது. 'பாகவதர்கள் யமலோகம் செல்லுகிற தில்லை. அவர்களுக்கு இங்கேயே சில துக்கங்கள் உண்டாய்விடுகின்றன' என்பது முதலியவை ச்ருதியிலும் சொல்லப்படுகின்றன. 'கையும் கயிறுமாயிருக்கும் தன் கிங்கரனைப்பார்த்து யமன் அவன் காதுக்குள் மதுஸூதனனுடைய பகவானிடத்தில் ப்ரபத்தி செய்தவர்களை விட்டுவிடு, நான் மற்றவர்களுக்குத் தான் எஜமானன், வைஷ்ணவர்களுக்கல்ல - என்று சொல்லுகிறானல்லவா' என்பது முதலிய யமன் வசனங்களும் ப்ரஸித்தங்கள். 'நீங்கள் திரிந்து கொண்டிருக்கையில் விஷ்ணு முத்ரைகளில்லாமல் உங்கள் கட்டளையைமீறி நடக்கும் மனிதன் காணப்படமாட்டான்' என்னுமிடத்திலும் யமவசநம் அறியப்படுகிறது.

ஆகையால் க்ருதக்ருத்யனான அதிகாரிக்கு ஏதாவது உபாயத்தினால் எல்லாவித பாபங்களினின்றும் விடுதலைசெய்து வழிநடத்தும் தேவதையால் கொண்டுவரப்பட்ட மனோரதத்துக்கு ஸுலபமான ரதத்தினால் தன்னிடம் சேர்

[illegible]

[illegible]

[illegible]

ப்பித்துக்கொண்டு பகவானை ஸ்ரீய:பதி ஸர்வதேச ஸர்வகாலாதிகளுக்கும் உரியதான ஸர்வவித கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைக் கொடுக்கிறான், என்று எல்லாம் ஸுலபமாயிற்று.

நீ சோகப்பட வேண்டாம்; அநிஷ்ட நிவ்ருத்தியானது இஷ்ட ப்ராப்தியில் முடிவுபெறுவதாலும், 'என்னையேவந்து சேரப்போகிறாய்' என்று முன்னமே சொல்லப்பட்டபடியாலும் நீ வ்யஸநப்படாதே. இதற்குமுன் உன்சோகம் (ப்ரபத்தியின்) அதிகாரத்துக்குள் ளடங்கிய தாகையால், அது குணபாகத்தைச்சேர்ந்து இருக்கிறது; இப்போது ஸர்வஜ்ஞனாய் ஸத்யஸங்கல்பனாய், பரமகாருணிகனாயிருக்கும் என்னால் (உன்னை) ரக்ஷிக்கும் பாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, மறுபடியும் நீ சோகித்தாயாகில் அது அறிவில்லாதவனுடைய கார்யமாகவே ஆகும், என்று தாத்பர்யம்.

இங்கும் சரணாகதி மந்த்ரத்தைப்போல இந்த மூன்று வாக்யங்களும் ஒரு வாக்யமாகின்றன. இதனர்த்தம் இதுவே. வேறு உபாயங்களில் அதிகாரமில்லாத நீ எல்லோர்க்கும் ஸுலபமாய், ஸர்வபலங்களையும் கொடுத்தல் முதலிய குணங்களோடு கூடியவனான என்னை உபாயமாக நிச்சயித்து ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலிய ஐந்து அங்கங்களோடுகூடிய ஆத்மரக்ஷணத்தின் பாரஸமர்ப்பணத்தைச் செய். ஸர்வசக்தித்வம் பரமகாருணிகத்வம் முதலிய குணங்களையுடைய நான் பாரத்தை (என்னிடம்) போட்ட உன்னை எல்லா பாபங்களி



[illegible]

[illegible]

னின்றும் விடுவிக்கக் கடவேன். பரஸ்வீகாரம் செய்துகொண்ட நான் விழித்திருக்கையில் நீயோவென்றால் ஸந்தேஹமற்று ஸுகமாக இரு;—என்று. அப்படியே (சரணமடை) என்பதற்கு விதியாக அர்த்தம் சொல்லுவதென்னவென்றால்:—எல்லா பாபங்களையும் நிவர்த்திப்பித்துக்கொண்டு பரமாத்மாவை அடைய இச்சிக்கிறவனாய் (அதற்கு) ஒரு கைம்முதலுமில்லாதவனாயிருப்பவன் பகவானைச் சரணமடையக்கடவன்—என்று.

இந்த வாக்யத்துக்கு பாஷ்யகாரரால் அங்கப்ரபத்தி பரமாக அர்த்தயோஜனை செய்யப்பட்ட படியால் இதற்கு ஸ்வதந்த்ர ப்ரபத்தி பரமான அர்த்தமில்லை யென்று ப்ரமிக்க கூடாது. பாஷ்யகாரருடைய அபிப்ராயமிது வன்றோ? எப்படி பகவான் ஸகல பலத்தையும் கொடுப்பவனென்று அங்கங்கே உத்கோஷிக்கப்படுகிறானோ அப்படியே ப்ரபத்தியும் ஸகல பலத்தையும் கொடுக்கக் கூடியது என்பது 'தான் அபேக்ஷித்த விஷயம் வேறொன்றாலும் நிறைவேற்றக் கூடாமலிருக்கு மளவில், (அதைஸாதிக்க) அவனொருவனே உபாயமென்று மஹா விச்வாஸத்துடன் அவனை யாசித்தல் அவனிடத்தில் ப்ரபத்தி செய்தல், சரணாகதி யென்னப்படுகிறது' என்னும் வசனத்தினால் (ஸித்திக்கிறது). எனவே இவ்வர்த்தம் நன்றாய் ஏற்படுகிறது. அதாவது:—ப்ரபத்திக்கு ஸகல பலத்தையும் கொடுக்கும் தன்மை யிருப்பதால் அது அங்கமாகவிருந்து பக்தி யோகாதிகளையும் ஸாதிக்க சக்தியுள்ளதாகிறது என்று பாஷ்யகாரரால் சொல்லப்படுகிறது. இப்படி யிருப்பதால், பக்தியோகம் முத

ஹித உபாயாந்தராபாவே தத்ஸ்தாந நிவிஷ்டா ப்ரபத்தி: யதா பக்தியோகாதீந் ஸம்பாதயதி, ஏவம் ஸர்வபாபதாரண காமஸ்ய தது³சித உபாயாந்தராபாவேந தத்ஸ்தாந நிவிஷ்டா ப்ரபத்தி: ஸ்வதந்த்ரா ஸதீ ஸர்வபாப மோக்ஷணம் கரிஷ்யதீதி பாஷ்யகார ஹ்ருதயம்; 'முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே' இதி ஶ்ருதாவேவ ஸாக்ஷாந்மோக்ஷ ஸாத⁴நதயா ப்ரபத்தி விதா⁴நாத் தத்ப்ரபஞ்சகத்வாச்ச சரமஶ்லோகஸ்ய । அதஸ்ஸர்வஹிதைஷிபி: ஆசார்யை:— 'ஸாத்⁴யேஷ்டஹேதோரேண ஶோசேத்³யோ யத ஏவ து³ஷ்கரேண । தஸ்ய தஸ்யாஹமேவேதி சரமஶ்லோக ஸங்க்³ரஹ: ॥' இதி.

இதர விஶிஷ்டாநுவாத³ பே⁴தா³ஶ்ச தைரேவ ப்ரகடிதா:— 'அதிகாரம் புரஸ்க்ருத்யோபாயஸ்ய நிரபேக்ஷதாம்। ஏகஶப்³தே³ந வக்தீ

லியவைகளை அநுஷ்டிப்பதற்குத் தடைகளான பண்டை வினைகளைத் தாண்ட அபேக்ஷிக்கிறவன், அதற்குசித ப்ராயசித்தங்களான க்ருச்ரம் சாந்த்ராயணம் முதலியவைகள் இல்லாதவளவில் (அவற்றில் சக்தியில்லாத வளவில் என்றபடி) அவற்றின் ஸ்தாநத்தில் வைக்கப்பட்ட ப்ரபத்தியானது பக்தியோகாதிகளை எப்படி நிறைவேற்றி வைக்கிறதோ அவ்விதமே எல்லா பாபங்களையும் தாண்ட ஆசைப்படுகிறவனுக்கு அதற்குத்தக்க வேறு உபாயங்களில்லாதபோது அந்த ஸ்தானத்தில் வைக்கப்பட்ட ப்ரபத்தியானது ஸ்வதந்த்ரமாய்க் கொண்டு ஸர்வபாபங்களினின்றும் விடுவிக்கையைச் செய்கிறது என்று பாஷ்யகாருடைய திருவுள்ளம். 'மோக்ஷமடைய விரும்புகிற நான் சரணமடைகிறேன்' என்று ச்ருதியிலேயே ப்ரபத்தி மோக்ஷத்துக்கு நேரான உபாயமாக விதிக்கப்படுவதாலும், சரமச்லோகம் அதற்கு விரிவுரை யாகையாலும் (இது கூடும்). இவற்றை யெல்லாம் அபிப்ராயத்திற்கொண்டு ஆசார்யரால் இங்ஙனே அருளிச்செய்யப்பட்டது:—'எந்தஎந்த இஷ்டபலத்துக்கு ஹேதுவான உபாயம் மிகவும் துஷ்கரமாய் (செய்யமுடியாததாய்) இருப்பதினால் யாதொருவன் வ்யஸநமடைகிறானோ, அவனுக்கு அந்தந்த உபாயம் நானே என்று சரமச்லோக அர்த்தத்தின் சுருக்கம்' என்று.

மற்றவைகளான விசிஷ்டவிதி (சிலவிசேஷங்களோடு சேர்த்துவிதிப்பது) அநுவாதம்என்னும் பேதங்களும் அவராலேயே விளக்கப்பட்டிருக்கிறது—'சில வித்வான்கள், அதிகாரத்தைமுன்னிட்டு, உபாயம் மற்றொன்றையும் அபேக்ஷியா



தி கேசித்³வாக்யவிதோ³ விது³: ॥ நைரபேக்ஷ்யம் புரஸ்க்ருத்ய விஹிதஸ்ய லகீ⁴யஸ: । உபாயஸ்யாதிகாரஞ்ச ஶோகநேத்ராத்³யம் விது³: பரே ॥' இதி ॥ அத்ர த்³வ்யாகாரம், ஆகிஞ்சந்யம் நைரபேக்ஷ்யம் சேதி । தத்ர தாவதே³கே வ்யாசக்ஷு: ஸர்வத⁴ர்மாந் பரித்யஜ்யேதி ஆகிஞ்சந்யரூப அதிகார உக்த:, 'மாமேகம்' இதி ஏகஶப்³தே³ந நைரபேக்ஷ்யம் ப்ரகாஶ்யத இத்யாசக்ஷதே । அந்யேது, ஸர்வத⁴ர்ம பரித்யாக³ வசநேநைவ ஶரணவரணஸ்ய விஶேஷணத்வேந நைரபேக்ஷ்யம் போ³த்⁴யம் । மாஶுச இதி ஆகிஞ்சந்யம் ஸூச்யத இதி கத²யந்தி । உப⁴யேஷாமபி ஆசார்யாணாம் ஆகிஞ்சந்யம் நைரபேக்ஷ்யமபி அநுமதமிதி ந கஶ்சித்³ விரோத⁴: । கேவலம் வாக்யயோஜநாயாம் ஏவ பே⁴த³: ।

நித்யநைமித்திகம் கர்ம ஸ்வதந்த்ராஜ்ஞாநுபாலநம் ।
ப்ரபந்நாநாமநுஷ்டே²யம் இதி வேதா³ந்தநிர்ணய: ॥

மலிருப்பதை ஏகம் என்னும் பதம்சொல்லுகிறது என்றார்கள். வேறுசிலர், இலகுவானஉபாயத்தின் நைரபேக்ஷ்யத்தை முன்னிட்டு விஹிதமானமிகவும் லகுவானஉபாயத்தின் அதிகாரம் 'சோகப்படாதே' என்ற விடத்தில் சோகத்தைச் சொல்லியிருப்பதினால் அறிவிக்கப்படுகிறது என்றறிந்தார்கள்'—என்று இங்கு வெளியிடப்படவேண்டியவை இரண்டு. ஆகிஞ்சின்யமும் (கைம்முதலில்லாமையும்) நைரபேக்ஷ்யமும் (வேறொன்றை எதிர்பாராமையும்), என்பவை. அவ்விடத்திலேவென்றால் சில ஆசார்யர்கள், எல்லாதர்மங்களையும்விட்டு என்பதினால் ஆகிஞ்சின்யமாகிற அதிகாரத்தை அநுவதித்து (எடுத்துரைத்து), என்னை ஒருவனை என்று ஏக சப்தத்தினால் நைரபேக்ஷ்யம் ப்ரகாசிப்பிக்கப்படுகிறது என்கிறார்கள். வேறு சில ஆசார்யர்களோவெனில் எல்லாதர்மங்களையும் விடுவதைச்சொல்லி யிருப்பதினாலேயே சரணவரணத்துக் குறுப்பாக சொல்லப்படவேண்டிய நைரபேக்ஷ்யம் சொல்லப்படுகிறது; 'சோகப்படாதே' என்றதினால் ஆகிஞ்சின்யம் ஸூசிப்பிக்கப்படுகிறது; என்றுசொல்லுகிறார்கள். இவ்விரண்டுகூறின ஆசார்யர்களுக்கும் ஆகிஞ்சின்யமும் நைரபேக்ஷ்யமும் ஆங்கீகரிக்கப்பட்டவைகள். ஆகையால் ஒரு விரோதமுமில்லை. வாக்யத்தின் அர்த்தயோஜனையில் மட்டும் தான்அவர்களுக்குள் வித்தியாஸம்,

'நித்ய நைமித்திக கர்மங்கள் ஸ்வதந்த்ரனாகிய ஈச்வரனுடைய ஆக்ஞையை பரிபாலிக்கவேண்டுவதற்காக ப்ரபந்நர்களால் அநுஷ்டிக்கப்படவேண்டுமென்பது வேதாந்தத்தின் தீர்மானம். சரணாகதி நீடடார்களேல்லென்றால் பர

186720

[illegible]

மைகாந்திகளெனப்படுவோர். அவர்களுக்குக் கர்மங்கள் (பகவத்) கைங்கர்யரூபமாகக் கோதன்றிச் செய்யப் படவேண்டியவை' என்று இக்ப்ரகாரமாக ஸ்ரீபாஷ்யகாரராலும் அவர் சிஷ்யர்களான ஆசார்யர்களாலும், ஸத்ஸம்ப்ரதாய நியமமாகவது அவரவர்களுடைய நித்ய க்ரந்தங்களிலும் வர்ணிக்கப்படுகிறது,

இப்படி ப்ரமாண விரோதமில்லாமல் (விதி, அநுவாதம் என்ற) இரண்டு பக்ஷங்களுக்கும் அர்த்தமுண்டாகச் செய்தேயும், சில ஆதுநிகர்களால் (இக்காலத்தவரால்) செய்யப்பட்ட ஸர்வதர்ம ஸ்வரூபங்களையும் விடுவதுஎன்னும் கற்பனையானது, ப்ரமாண விரோதமானதாலும், பூர்வாசார்யர்களுடைய க்ரந்தங்களுக்கு விரோதமாகையாலும், ஸேதுமுதல் ஹிமாசலம்வரையில் காணப்படும் பகவத்ராமாநுஜ ஸித்தாந்திகளின் அநுஷ்டானத்துக்கு விரோதமாதலாலும் 'ச்ருதி ஸ்ம்ருதிகளில சொல்லப்பட்ட' என்பது முதலிய தம்மாசார்யர்களுடைய வசநங்களுக்கே விரோதமானதாலும், 'தர்மங்கள் குலையாமலிருக்கவும்' என்றாரம்பித்து 'புத்திமான் வைதிகாசாரத்தை மனதினால் கூடக் கடக்கக் கூடாது' என்ற அளவாயுள்ள விஷ்ணுவினுடையவும் ஜகன்மாதாவாகிய விஷ்ணுபத்நீயினுடையவும் வசநத்தினாலும், ப்ராமாணத்தை அநுஸரிப்பவர்களின் மனதுக்கு ஒருவிதமான சமத்காரத்தையும் வெளியிடுகிறதில்லை, என்று இப்படி ஒருவாறு காட்டினோம்.

இப்படிச் சரீரமுள்ளவளவும் நிர்தோஷமான கைங்கர்யம் செய்துகொண்டிருக்கும் பரமைகாந்திகளுக்கு மேலெழுவார்க்குக் கிடைக்கமுடியாததான [illegible]



[illegible]

வயாகம் என்னும் மார்க்கத்தினால் பரமபதமடைந்துபரஞ்சோதி 'யென்னப்பட்ட பகவானைக்கிட்டித் தனக்கியற்கையாயுள்ள (ஜ்ஞாநாநந்த) ஸ்வரூபத்தை மீளவும் பெறுகிறான்' என்று ச்ருதியில் சொல்லப்பட்ட க்ரமத்தில் தன் உண்மையான ஸ்வரூபம் ப்ரகாசித்து அதை முன்னிட்டுச்சுருக்கமற்ற ப்ரம்மாநுபவத்தால் ஸர்வதேச ஸர்வகால ஸர்வ அவஸ்தைகளுக்கும் உசிதங்களான எல்லாவித கைங்கர்யங்களையும் பகவானுக்குச்செய்யும் பேற்றையும்பெற்று நித்யமாக விருக்கும் வாழ்வு வாய்க்கும், என்று 'இந்த லோகங்களை' என்றர்த்தமுள்ளவை முதலான ச்ருதிகள் உறுதிப்படுத்தின.

'ஜ்ஞாநயோகத்திலிழிந்து கைவல்யத்தை (வெறும் பரிசுத்தாத்மாநுபவத்தை) அபேக்ஷித்த அதிகாரியும் அர்ச்சிராதிமார்க்கத்தால் பரமபதமடைந்து புகவானைத் தர்சித்தும் பகவதநுபவத்தில் நோக்கில்லாமல் தன்னாத்மாவையே அநுபவிக்குமிச்சையில் பெண்டாட்டியை விட்டவன் போல் எதோ ஒரு மூலையிலிருந்து கொண்டிருக்கிறான்', என்று சிலரால் யாதொன்று உத்கோஷிக்கப்படுகிறதோ, அது பாஷ்யம் முதலியவைகளுக்கும் யுக்திக்கும் விரோதமாகையால், நம்மால் ஒப்புக்கொள்ளப்படுகிறதில்லை. 'உபநிஷத்தை ச்ரவணம்பண்ணி உபாஸநம் செய்தவர்களுக்கு, (அதாவது, மற்ற ப்ரும்மவித்யைகளை உபாஸித்தவர்களுக்கு எந்த அர்ச்சிராதிகதி சொல்லப்படுகிறதோ அதையே இந்த வித்யையை உபாஸித்தவர்களுக்கும் உபதேசித்திருப்பதினால்), இந்த வித்யையில் உபாஸ்யனாகச் சொல்லப்பட்டவன் ஜீவனல்லன், பரமாத்மா' என்றர்த்தமுள்ள இந்த ஸூத்ரத்தில் ப்ரும்மவித்துக்களுக்கே அர்ச்சிராதி மார்க்கத்தில் சென்று [illegible]

[illegible]

ப்ரும்மத்தையடைதல் உபபாதிக்கப்பட்டது. தஹரவித்யையிலும் ப்ரஜாபதி வாக்யத்தில் ஜீவனைப் பற்றிச் சொல்லுகிற ப்ராஜாபதி வாக்யத்தில் பரமாத்மாவை யடைவதாகிய பலம் சொல்லியிருப்பது, அர்த்த ஜீவாத்ம உபாஸநம் ப்ரும்ம வித்யைக்குச் சேஷமா (அங்கமா) யிருப்பதினால், என்று ஸ்ரீபாஷ்யகாரரருளிச்செய்தார். அதெப்படியெனில், ப்ரும்ம ப்ராப்தியானது ப்ரும்மவித்யையின் பலமென்று ஸங்க்ரஹிக்கப்பட்டதாகையால், ஜ்ஞாநயோகம் ப்ரும்மவித்யைக்கு அங்கமாயிருப்பதுபற்றி, (ஜ்ஞாநயோக நிஷ்டனுக்கும்) அர்ச்சிராதி மார்க்கத்தால் பரமபத ப்ராப்தி முதலியவையுண்டு. ஸ்வதந்த்ரமான ஜ்ஞாநயோகநிஷ்டைக்கு ப்ரக்ருதி மண்டலத்திலேயே ஓரிடத்திலிருந்து கொண்டு ஆத்மாநுபவம் பண்ணுதல் தான் பலம். அப்படியே பராசரராலும் கூறப்படுகிறது. 'தம் ஆத்ம ஸ்வரூபத்திலேயே ஸந்தோஷத்தை அடைந்திருக்கிற ஞாநயோகிகளுக்கு அழிவில்லாத இடம் இருக்கிறது'— என்று. இங்கு அழிவில்லாமையாவது நெடுங்காலமிருப்பதே; அல்லது இது ஜீவஸ்வரூபம் நித்யமென்பதைக் காட்டுகிறதாம். அப்போது ஸ்வரூபமே ஸ்தாநமென்னப்படுகிறது. ப்ரும்மவித்துக்களுக்கு அர்ச்சிராதி மார்க்கத்தினால் ப்ரும்ம ப்ராப்தி யென்பது அவராலேயே 'யாவர் எப்போதும் ப்ரும்ம த்யானமே செய்யும் யோகிகளான பரமைகாந்திகளோ, அவர்களுக்கு, நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணிக்கொண்டிருக்கும் அந்த எல்லாவற்றிற்கு மேற்பட்டதான ஸ்தாநம்', என்று சொல்லப்பட்டது.



[illegible]

உபாயதசையில் 'ராமன் தம்பி' என்றாற்போல் ப்ருமத்துக்குக் குண (சரீர) மாக தம்மாத்மாவை உபாஸிக்கிறவர்களுக்கும், தம்மாத்மாவைச் சரீரமாக உடைய ப்ரும்மமென்று உபாஸிக்கிறவர்களுக்கும், அப்படியே பலதசையிலும் குறைக்கமற்ற ப்ரும்மாநுபவம் ஸித்திக்கிறது; கேவல ஆத்மோபாஸகனுக்கோவென்றால் அஃதில்லை, என்று பிறிவு. அவனுக்கும் 'எல்லாரும் நழுவும் தன்மையை உடையவர்கள்' என்றபடியே நழுவும் தன்மை சொல்லப்படுகிறது. எனவே, கர்மவசத்தால் மறுபடியும் விஷயாநுபவமும் ஸம்பவிக்கக்கூடுமாதலால், அத்ருஷ்டவசத்தால் பகவதுபாஸநம் இருக்கிறதேயானால் அர்ச்சிராதிமார்க்கத்தால் பகவத் ப்ராப்தியுமுண்டாகிறதென்று அதை (சாஸ்த்ரத்தை) அறிந்தவர்களின் நிர்மாணம். பரமபதத்துக்குப்போய், பகவதநுபவமுண்டானால் அதைவிட்டுவிட்டுத் தன்னாத்மாநுபவத்தில் ஈடுபடுகிறவன், எல்லா பந்தங்களினின்றும் விடுபட்டவனா, கர்மவச்யனா? இரண்டாம் பக்ஷத்தில், ஸம்ஸாரியே யாகிறான். முதலில் ப்ரும்மாநுபவத்தின் இடையூறுக்குக் காரணமில்லை. இச்சை முதலியன காரணமென்பதும் பரிஹஸிக்கத்தக்கதாயிருக்கிறது. ஈச்வரன் தன் ஸ்வாதந்திரியத்தினால் சிக்ஷிக்கிறானென்றால், காரணமில்லாமல் தண்டிப்பது அவனுக்கு மஹாதோஷமாகும். காரணமிருக்கும் பக்ஷத்தில், கர்மமே காரணம் ஆகவேண்டும். அதுவோ போய்விட்டது; தொடர்கின்றதென்றால் அது மோக்ஷமாகாது. ஆகையால் ப்ரும்மவித்துக்களுக்கே ப்ரும்ம ப்ராப்தி உண்டாகிறது, என்று எல்லாம் ஒப்பியிருக்கின்றது.

விஶுத்தமதிவிஶேஷாத் வீக்ஷ்ய ஹேயாந் புமர்த்தாந்
ஸ்திரவிநிஹிதபுத்தி: யஸ்து கைவல்யமுக்தௌ ।
புநரபி ஸ பரிவ்ருத்யா ஸம்ஸ்ருதிம் ஸ்வஸ்ய காலே
ஹரிபஜநவிபாகாத் முக்திமேவாப்யவாப்ஸ்யந் ॥
வாராஶிகந்யாவல்லபஸ்யைவ பாதே
ஶரணவரணவாணீம் தந்த்ராணாம் நராணாம் ।
அஶரணமநிதராணாம் நிர்மலம் நிர்மமாணாம்
ஶரணமிஹ பரத்ர ப்ரத்யஹம் ந: ப்ரதீம: ॥
ஸ்ரீமத்த்ரய்யந்த ஸித்தாந்த தேஶிகேந்த்ரஸ்ய ஸூநுநா ।
ரஹஸ்யத்ரய ஸாரார்த்தோ வரதார்யேண ஸங்க்ருஹீத: ॥

॥ இதி சரமச்லோகாதிகார: த்ருதீய: ॥

॥ ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரார்த்தஸங்க்ரஹ: ஸமாப்த: ॥

॥ ஸ்ரீமத்வரதார்ய குரவே நம: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

॥ ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம: ॥

---

பரிசுத்தமான புத்தி விசேஷத்தினால் (இதர) புருஷார்த்தங்களை ஹேயங்களாக (ஒதுக்கத் தக்கவையாகப்) பார்த்து ஸ்திரமான புருஷார்த்தத்தில் புத்தியை வைத்தும் யாதொருவன் மறுபடியும் கைவல்ய முக்தியில நிற்கின்றானோ, அவனுக்குப் பழைய ஸம்ஸாரமே உண்டாகிறது. அதன்றி பகவத் பக்தியோகத்தின் பரிபாகத்தால் ஒருகாலத்தில் மோக்ஷமாவது உண்டாகும்.

ஸமுத்ர கன்யை (மஹாலக்ஷ்மீ)யின் வல்லபனை ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளில் சரணவரண மந்த்ரமாகிய த்வயத்தை அநுஸந்தித்துக்கொண்டே யிருப்பவர்களாயும், மற்றோர் தெய்வந் தொழாதவர்களாயும் மமதையற்றவர்களாயுமிருக்கும் மனிதர்களுடைய தோஷமற்ற திருவடியை இந்த லோகத்திலும் (உபாயமநுஷ்டிக்கும்போதும்) பரலோகத்திலும் (மோக்ஷத்திலும்) எந்த ஸமயத்திலும் நமக்கு ரக்ஷகமாக நம்பியிருக்கிறோம்.

ஸ்ரீவேதாந்த ஸித்தாந்தத்தின் தேசிக ச்ரேஷ்டருடைய குமாரரான வரதாசார்யரால் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் அர்த்தம் இப்படிச் சுருங்கச் சொல்லப்பட்டது.

மூன்றாவது சரமச்லோகாதிகாரம் முற்றிற்று.

ஸ்ரீரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹம் முற்றிற்று.

ஸ்ரீமத் வரதார்ய குருவின் திருவடிகளே சரணம்.

சீரார் தூப்பில் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீஹயக்ரீவன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## பூதத்தாழ்வார்

அருளிச்செய்த

# இரண்டாந்திருவந்தாதி.

அவதாரிகை.

(17) மற்றாரியலாவார் வானவர்கோன் மாமலரோன்
சுற்றும் வணங்குந் தொழிலானை - ஒற்றைப்
பிறையிருந்த செஞ்சடையான் பின் சென்று மாலைக்
குறையிரந்து தான்முடித்தான் கொண்டு.

(இ - ள்.) வானவர்கோன் - (முப்பத்துமுக்கோடி) தேவர்கட்குத்தலைவனான இந்திரனும், மாமலரோன்—சிறந்த (திருமாலினது திருநாபீ)கமலத்தை வாழிடமாகவுடைய பிரமனும், (நேராகநின்று கிட்டமாட்டாமையாலே), சுற்றும் வணங்கும்—சுற்றுப்பக்கங்களில் நின்றாகிலும் (தம்முடைய அபிமானம்நீங்கி) ஆச்ரயிப்பதற்குஏற்ற - தொழிலானை - செய்கையையுடையனாகிய, மாலை-ஸர்வாதிகனான எம்பெருமானை,—ஒற்றை பிறை இருந்த செஞ்சடையான் - ஏககலாமாத்ரனான, சந்திரனைத் தரித்த செந்நிறமான ஜடையையுடைய ருத்ரன், கொண்டு - மனத்திலேகொண்டு [தியானித்து], பின் சென்று - (தனது அஹங்காரங்கழிந்து) அநுவர்த்தித்துப்போய், (பின்பு) இரந்து— (பல்லைக்காட்டி) யாசித்து, குறை- (தன்னுடைய) குறையை, தான் முடித்தான்-தான் தலைக்கட்டிக்கொண்டான்; (ஆனபின்பு), ஆர் - இயலாவார் - ஆச்ரயிக்கும்படி தகுதியுடையவர், (அச்ஸர்வேச்வரனைத்தவிர), மற்று யார் - வேறுயாவர் இருக்கின்றனர்? [எவருமில்லை; ஸர்வேச்வரனே ஸர்வஸமாச்ரயணீயனென்றபடி]; (எ - று)

இந்தச்ரியப்பதியையே யாச்ரயிக்கவேணுமென்கிற நிர்ப்பந்தம் என்?' என்னில்,— 'பிரமன் முதலிய தேவர்களும் நேர்கொடு நேராக நின்று ஆச்ரயிக்க முடியாமல் பாடே பக்கே நின்று ஆச்ரயித்துத் தமது குறைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இடனானவன் இவனே யானபின்பு, வேறு ஆச்ரயித்தற்கு உரியார் உண்டோ? என்கிறார். (கஎ)

(18) கொண்ட துலகங் குறளுருவாய்க் கோளரியா
யொண்டிறலோன் மார்பத் துகிர்வைத்தது - உண்டதுவும்
தான்கடந்த வேழுலகே தாமரைக்கண் மாலொருநாள்
வான்கடந்தான் செய்த வழக்கு.

(இ-ள்.) குறள் உரு ஆய் - (தன்னை யழியமாறி) வாமனரூபத்தைக் கொண்டு, (மகாபலி சக்கரவர்த்தியினிடத்தில் சென்று யாசித்து), உலகம் - பூமிமுதலான லோகங்களை, கொண்டது - வாங்கிக்கொண்டதும்,— கோள் அரி ஆய் - மிடுக்கையுடைய நரசிங்கமாகி, ஒன் திறலோன் மார்பத்து - அழகிய வலிமையையுடையவனுன இரணியாசுரனது மார்பில், உகிர் வைத்தது(உம்)-(தனது) நகங்களைவைத்துக் கிண்டுபோகட்டதும், - ஒருநாள்- ஒருகாலத்திலே தான் கடந்த-தான் அளந்துகொண்ட, ஏழ் உலகே-ஸப்தலோகங்களையும், (பிரளயங்கொள்ளாதபடி தாதமபவிபாகம் பாராமல் எல்லாவற்றையும்) உண்டதும் - திருவயிற்றிலே வைத்துக்கொண்டதும், (ஆகிய செயல்கள்),— வான் கடந்தான் - நித்திய சூரிகளுக்கும் அவ்வருகாயுள்ளவனுன, தாமரை கண் மால் - ('இவனே யாவரினும் மேம்பட்டவன்' என்பதைக் கோள்சொல்லித் தருவனவான) செந்தாமரை மலர் போன்ற கண்களையுடைய திருமால், செய்த—,வழக்கு-நியாயமான செயல்கள் ; (எ-று.

இந்த ச்ரியஃபதியே ஆச்ரியக்கத்தக்கவனுகி ஸர்வாதிகனு யிருத்தலால் தான், தன்னைப் பலபடியாக அழியமாறியாகிலும் ஜகத்ரக்ஷணஞ்செய்கிறு னென்கிறூர். உடையவன் உடைமையைக்காக்கை ப்ராப்தமான செயலென்க. பிறருக்கு ஒருகார்யஞ்செய்தானுகக் கொள்ளாமல் தன்கார்யத்தைத் தானே செய்தா னென்னலாம்படி யிருக்கையாலே, 'உலகங்கொண்டது முதலியன - வழக்கு என்றூர். வான் - வானத்திலுள்ள நித்யசூரிகளுக்கு, ஆகுபெயர். இனி, வான்கடந்தான் - வானத்தை யளவிடினும் அளவிட வொண்ணுத பெருமையையுடைய னென்றும், ஸ்வர்க்கத்தை யளந்தவனென்றும் பொருளுரைப்பது முண்டு. (௧௮)

(19) வழக்கன்று கண்டாய் வலிசகடஞ் செற்றூய்
வழக்கென்று நீமதிக்க வேண்டா - குழக்கன்று
தீவிளயின் காய்க்கெறிந்த தீமை திருமாலே!
பார்விளங்கச் செய்தாய் பழி.

(இ - ள்.) திரு மாலே - (உன்னுடைய ஸௌகுமார்யத்தைக்கண்டு 'என் புகுகிறதோ!' என்று வயிறு எரிந்து மங்களாசாஸநபரையான) பெரிய பிராட்டியார் என்றும் அகலாதிருக்கிற ஸர்வாதிகனே! (நீ), - (ஸ்ரீக்ருஷ்ணவதாரத்தில் சிறியபிள்ளையா யிருந்தபோது அதிஸுகுமாரமான உனது திருவடிகளாலே), வலி சகடம் - அதி ப்ரபலமான சகடத்தை, செற்றூய் - உதைத்து முரித்து விழவிட்டாய்; வழக்கு அன்று கண்டாய் - (நீ இப்படிச் செய்தது) தக்கதன்றுகாண் ; நீ - இந்த ஸாஹஸத்தொழிலை ஏன் செய்தோமென்கிற அநுதாபந்தானு மில்லாதிருக்கிற) நீ, (ரக்ஷகனுன நாம் விரோதிகளைநிரஸித்து ரட்சிப்பது), வழக்குஎன்று-ப்ராப்தமான செயலன்றோ என்று,மதிக்கவேண்டா-புத்திபண்ண வேண்டா ; (இந்தஸாஹஸத்தொழிலைச் செய்ததற்கு மேலே), குழகன்று - (அஸுரனுன) இளங்கன்றை, தீ விளவின் காய்க்கு - (அசுராவேசத்தினுலே) தீயதான விளவின்காயை புகுக்கும் பொருட்டு, எறிந்த (பிடித்து) வீசிப்போகட்டா, யளித்ததீமை - இந்தத் தீம்பான செயலை, பார் - பூமியிலே, விளங்க - ப்ரகாசிக்கும்படி, பழி - தவறுக, செய்தாய்—; (எ - று.)



தன்னை யழியமாறியும் தன்னுடைமையைப் பாதுகாக்கை தனக்கு ப்ராப்தமென்று பகவான் நினைத்திருக்க, இவ்வாழ்வார் அவனுடைய ஸௌகுமார்யத்தை யநுஸந்தித்து, 'இது அப்ராப்தம் என்கிறூர் : அன்றியும், இவ்வாழ்வார் மங்களாசாஸந பராகையினுலே பகவானை நோக்கி விபூதியில் ஏகதேசத்தைக் காப்பாற்றப்புகுந்து உபய விபூதியையும் அழிக்கப்பார்த்தா யென்கிறு ரென்னலுமாம். விபூதிமானுக்கு ஒருகுறை நேரில், விபூதியே யழிந்து விடுமென்பது, தேற்றம். (௧௯)

(20) பழிபாவங் கையகற்றிப் பல்காலும் நின்னை
வழிவாழ்வார் வாழ்வராம் மாதோ - வழுவின்றி
நாரணன்றன் நாமங்கள் நன்குணர்ந்து நன்கேத்துங்
காரணங்க டாமுடையார் தாம்.

(இ-ள்.) பழி-அபகீர்த்தியையும், பாவம்-(பரஹிம்ஸைமுதலிய) தீச்செயலையும், கையகற்றி-கைகழியவிட்டு, பல் காலும் - பலபோதும்,நின்னை - உன்னை, வழி - (சாஸ்திரங்களிற் கூறிய) வழிப்படியே (வழிப்பட்டு), வாழ்வார்-வாழ்பவர்களும்,—வழு இன்றி - (இடையில் விட்டிடுதலாகிய) குற்றமில்லாமல், நாரணன் தன் நாமங்கள் - (எல்லாப்பொருள்களையும் ரக்ஷிக்கும்படி அந்தர்யாமியாயிருத்தலாலே) நாராயணனென்கின்ற உன்னுடைய திருநாமத்தை, நன்குஉணர்ந்து - (பிரீதியோடு) நன்றாக அறிந்து, நன்கு ஏத்தும் - அழகாக ஸ்தோத்ரஞ் செய்கின்றதற்குஏற்ற, காரணங்கள் - பக்தியும் அதற்குக்காரணமானருசியும் அதற்குமூலமான ஆநுகூல்யமும் அதற்கும் அடியான பகவத்கடாக்ஷமும் என்னும் போன்ற இவைகளை, தாம் - தாங்கள்,உடையார் - பெற்றிருப்பவர்களும், (ஆகியஇவ்விரண்டதிகாரிகளும்), — வாழ்வர் - (பெருஞ்சுகத்தோடு) வாழப்பெறுவார்கள் ; (எ-று.)— மாது—அசை ; இது ஓராச்சரியம் இருந்தபடி என் ? என்ற பொருளைக் குறிக்கும் இடைச்சொல்லுமாம்.

முன்னிரண்டடிகளிலே உபாயாந்தரநிஷ்டரையும், பின்னிரண்டடிகளிலே ப்ரபந்நரையுங் குறிக்கின்றனர். இவ்விருவரும் எம்பெருமானையே உபேயமாகப்பெறுபவராதலால் வாழ்ச்சிபெற்றவராவ ரென்கின்றனர். முன்னைய அடிகளிற்கூறியவர் - பகவத்ஸமாச்ரயணத்தில் அடியிட்டவரென்றும், பின்பு கூறியவர்கள் - ஆச்ரயணத்தில் மூழ்கித்தேர்ந்தவரென்றும் அறிக. இனி நாரணன்றன் நாமங்கள், ஏத்தும்காரணங்களுடையராகி நின்னை வழிபட்டுவாழ்வார் வாழ்வரென்று அந்வயித்து, ஜகத்ரக்ஷணத்தை யநுஸந்தித்துப் பகவானை யாச்ரயித்தவர்களன்றோ வாழ்பவ ரென்று கருத்துக் கூறுதலுமொன்று. பழி - தாங்களறியாதிருக்கப் பிறரறிந்தேறிடும் அபகீர்த்தி, பாவம் - புத்திபூர்வகமாகச் செய்யும் பரஹிம்ஸை முதலியவற்றால் விளையும் பாவம். 'தாரணங்கள் தாமுடையார்தாம்' என்ற பாடத்துக்கு, தாரணம் - த்ருதி, மனநிறைவு என்க. (௨௦)

(21) தாமுளரே தம்முள்ள முள்ளுளதே தாமரையின்
பூவுளதே யேத்தும் பொழுதுண்டே - வாமன்
திருமருவு தாள்மருவு சென்னியரே செவ்வே
யருநரகஞ் சேர்வ தரிது.

(இ-ள்.) தாம் - (பகவானை ஆச்ரயிப்பதற்குஏற்ற கரணகளேபரங்களையுடைய) தாங்கள், உளரே - முன்னமே உளராயிருந்தார்களே ; தம் உள்ளம் - (எம்பெருமானை ஸ்தோத்ரம் செய்வதற்குக் காரணமான) தங்களுடைய மனம், உள் உளதே - (வெளியே போய்த்தேடவேண்டாதபடி) தமக்குள்ளே இருக்கின்றதே ; (எம்பெருமானது திருவடிகளிலே ஸமர்ப்பிக்க ஏற்றதான), தாமரையின்பூ—, உளதே - (இந்தவிபூதியில்தானே கைக்கு எட்டினதாக) இருக்கின்றதே ; ஏத்தும் - வாய்விட்டுப் புகழுதற்கு ஏற்ற, பொழுது - காலம், உண்டே - உண்டாயிருந்ததே ; வாமன் - (தன் உடைமையைப் பெறுகைக்குத் தான் யாசகனாகச் சென்ற சீலமுள்ள) வாமன மூர்த்தியான ஸர்வேச்வரனுடைய, திரு மருவு தாள் - ஐசுவரியத்தைத் தெரிவிக்கும் (த்வஜம் அரவிந்தம் முதலிய சின்னங்களோடு கூடிய) திருவடிகளிலே, மருவு - சேஷத்வத்துக்குத் தகுதியாகச்) சேர்கைக்கு ஏற்ற, சென்னியரே - தலையை யுடையவர்களா யிருந்தார்களே ; (இப்படியிருக்க), (இவ்வுலகத்தவர்), செவ்வே - நேராக, அருநரகம் - கொடியநரகத்தை, சேர்வது—, அரிது - (ஆச்சரியப்படத்தக்க) அருமையான செயலாயிருந்தது ; (எ - று.)

எம்பெருமானை ஏத்துவதற்கு ஏற்ற கரணங்கள் குறைவற்றனவா யிருக்கையிலும் இந்த உலகத்தவர் விலக்கடிதேடிக்கொண்டு நரகத்திற்சேர்கிறது எங்ஙனேயோ! என்று ஆச்சர்யப்படுகிறார். ‘ நாராயணேதி ஸப்தோஸ்தி வாகஸ்தி வசவர்த்தினீ - ததாபி நரகே கோரே பதந்தீதி கிமத்புதம் ’ என்றதுங் காண்க. தாமுனே - ‘ விசித்ரா தேஹஸம்பத்தி ரீச்வராய நிவேதிதம் - பூர்வமேவ க்ருதாப்ருஹ்மன் ஹஸ்தபாதாதி ஸம்யுதா ’ என்றபடி எம்பெருமானைப் பஜிப்பதற்கு ஏற்ற கரசரணாதி அவயவங்களோடு பகவான் படைத்திருப்பதனால், அவனைப் பஜிக்கின்ற தன்னைத் தான் ஸ்ருஷ்டிக்க வேண்டியதில்லையே. ஏத்தும்பொழுது உண்டே - பகவானை ஸ்தோத்ரஞ் செய்ய வேண்டியதற்கு ஏற்ற காலத்தை அவ்வெம்பெருமானே ஸ்ருஷ்டித்து வைத்திருக்கின்றானே யென்றபடி. அருநரகம் சேர்வது - மீண்டும் ஸம்ஸாரத்தையே யடைவது எனினுமாம். (௨௧)

(22) அரிய தெளிதாகு மாற்றலால் மாற்றிப்
பெருக முயல்வாரைப் பெற்றால் - கரியதோர்
வெண்கோட்டு மால்யானை வென்று முடித்தன்றே
தண்கோட்டு மாமலரால் தாழ்ந்து.

(இ-ள்) ஆற்றலால் - (தன்னுடைய) வல்லமையினால், மாற்றி - (இவன் செய்யும் முயற்சியொன்றும்) வேண்டா என்று) விலக்கி, (ஞானபக்திகள் முதல் கைங்கர்ய பர்யந்தமாக இந்தச்சேதநனுக்கு வேண்டும் ஸர்வகார்யத்தையும் தன்மேலே யேறிட்டுக்கொண்டு), (இச்சேதநன் வேண்டும் பயன்களை யெல்லாம் பெறுவது தன்பேறாகும்படி), பெருக - மிகவும், முயல்வாரை - உத்ஸாஹங்கொண்ட மஹாபுருஷ ரொருவரை, பெற்றால் - இடைக்கப்பெற்றால், அரியது - (செய்வதற்கு) அருமையான செயலும், எளிது ஆகும் - சுகரமானதாய் விடும்; (அது எங்கேகண்டோ மென்றால்), வெண் கோடு - வெண்மைநிறமுள்ள தந்தங்களைக் கொண்டுள்ள, மால் - பெரிய, கரியது ஓர் யானை - கருநிறத்தையுடையதான கஜேந்திராழ்வான், தண் - குளிர்ந்த, கோடு - பொய்கைக் கரையிலே, மா - சிறந்த, மலரால் - தாமரஸ புஷ்பங்களைக் கொண்டு, (மடுக்கரைக்கு அரைகுலையத் தலைகுலைய ரக்ஷிப்பதற்காக ஓடிவந்த ஸர்வேச்வரனது திருவடிகளிலே), தாழ்ந்து - வணங்கி யடிமைசெய்ததனால், வென்று - (எம்பெருமானிடத்து அடிமைசெய்வதற்குக் காற்கட்டான முதலையை) ஜயித்து, முடித்தன்றே - (தன்) அபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டிதன்றோ! எ - று.)



தமக்கு எம்பெருமானை ஆச்ரயிப்பதற்கு ஏற்ற பரிகரமில்லா விட்டாலும் தன்பக்கல் தம்முடைய பாரத்தை வைத்திட்டுச் சிந்தையற்றிருப்பார்க்கு எளிதாக ஆச்ரயிக்கும்படி மிக்க சீலகுணமுடைய அவ்வெம்பெருமான், விலக்காமை யொன்றையே பற்றாசாகக்கொண்டு தன்னுடைய ஸர்வசக்தியால் இந்தச் சேதநருடைய ஸகலப்ரவ்ருத்திகளையும் வேறுபடுத்துப்போக்கி, ஸர்வபாரங்களையும் தன்மேலேறிட்டுக்கொண்டு இவருடைய நன்மை தன்பேறு என்று நினைத்திருப்பான் ; ஆனபின்பு, பகவல்லாபமும் பகவத்ப்ரஜ்ஞமும் ஆகிய அருஞ்செயல்கள் யாவர்க்கும் எளிதிற் கைகூடும் ; இதனை ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு உதவி (அவனது விரோதியைப்போக்கி அடிமைகொண்ட இடத்து நன்றாகக் காணலா மென்பதாம். இதனால், ப்ரபந்நர்க்கு எம்பெருமான் உபகரிக்குந்தன்மையைத் தெரிவித்தபடி.

இனி, இந்தப் பாசுரத்தின் முன்னிரண்டடிக்கு வேறுவகையாகப் பொருள்கூறுமாறு :— பெறலாகுஞ் சுகம் நம்முடையதான பின்பு, ஈச்வரனிடத்துப் பாரத்தை வைப்பது எதற்கு? ஆகவே, நாமே பக்திசெய்வோ மென்கிற ஒரு அதிகாரியைப் பெற்றால், அரியதான பகவல்லாபமும் அவ்வதிகாரிக்கு எளிதிற் கைகூடு மென்பது. இதனால், பக்தியோகநிஷ்டரைச் சொன்னபடி. இந்த விஷயத்திற்கு ஸ்ரீகஜேந்த்ராழ்வான் சரிதையை த்ருஷ்டாந்த மாக்கிக்கொள்க.

‘ தண்டோடு ’ என்ற பாடத்துக்கு - குளிர்ந்த அகவிதழையுடைய என்றும்; ‘ வென்றி முடித்தன்று ’ என்ற பாடத்துக்கு - திருவடிகளிலே பணிந்ததனாலன்றோ (தனது) வெற்றியை முடிவாகப்பெற்ற தென்றும் பொருள். (௨௨)

23. தாழ்ந்து வரங்கொண்டு தக்க வகைகளால்
வாழ்ந்து கழிவாரை வாழ்விக்கும் - தாழ்ந்த
விளங்கனிக்குக் கன்றெறிந்து வேற்றுருவாய் ஞால
மளந்தடிக்கீழ்க் கொண்டவவன்.

(இ-ள்.) தாழ்ந்த - (பழத்தின்கனத்தினால் கிளைகள்) தாழ்ந்துகிடந்த, விள - விளாமரத்தின், கனிக்கு - (அஸுராவிஷ்டமான) பழத்தைவீழ்த்துவதன்பொருட்டு, கன்று - (அஸுராவிஷ்டமான) கன்றை, எறிந்து - (எறிகோலாகக்கொண்டு) எடுத்தெறிந்து, வேறு உருஆய் -(ச்ரியப்பதியான தன்னுடையவடிவத்தைவிட்டு) இரப்பாளனான வாமன மூர்த்திவடிவமாய், ஞாலம் - பூமியை, அளந்து -, அடிக்கீழ் - (தனது) காற்கீழே, கொண்ட - அடங்கும்படிகொண்ட, அவன் - அந்த ஸர்வேச்வரன், தாழ்ந்து - (தனது திரு

வடிகளிலே) வணங்கி, வரம்கொண்டு - (எங்கள் இஷ்டத்தை நீயே பூர்த்திசெய்து தரவேணுமென்று சொல்லித் தனது) திருவருளைப்பெற்று, தக்க வகைகளால் - (தங்கள் தங்களுடைய அதிகாரத்துக்கு) ஏற்ற ப்ரகாரங்களாலே, வாழ்த்து - (ஐசுவர்யம் கைவல்யம் பகவல்லாபம் என்கிற தங்கள்தங்களுடைய) அபீஷ்டங்களைப்பெற்று, கழிவாரை - மேன்மேல் ஸுகத்தை மிகுத்துக்கொள்ளவேணுமென்று இருக்கிற அந்த அதிகாரிகளை, வாழ்விக்கும் - வாழ்விப்பான்; (எ - று.)

தன்னை ஆச்ரயிப்பவர்களின் விரோதிகளைப்போக்கி அவரவர் மேன்மேலும் விரும்புகின்ற அபீஷ்டங்களைத்தந்தருளுவன், அவ்வெம்பெருமானென்பதாம். துரபிமானப்பட்டவன் கையிலகப்பட்ட பூமியைத் தன் திருவடிகளிலேகொண்டு வாழ்வித்தவன் தாழ்ந்தவர்களின் ப்ரதிபந்தகங்கள் விளங்கனிபட்டபாடு படும்படி போக்கிக்காப்பனென்பது, இங்குப்பெறப்படும். வேற்றுருவாய் என்பதற்கு - சிறுகாலைக்காட்டி அளக்கும்போது பெரியவடிவைக்கொண்டு என்றுமாம். (உ௩)

24. அவன்கண்டாய் நன்னெஞ்சே யாருளுங்கேடு
மவன்கண்டா யைம்புலனாய் நின்றான் - அவன்கண்டாய்
காற்றுத்தீநீர்வான் கருவரை மண்காரோதச்
சீற்றத்தீயாவானுஞ் சென்று.

(இ-ள்.) நல் - நல்ல [பகவானுடைய வைபவத்தைக் கேட்பதால் மகிழ்ச்சிகொள்கின்ற] ; நெஞ்சே-மனமே, ஆர் அருளும் - பரிபூர்ணமான க்ருபையாலே உண்டாகக்கூடிய மோக்ஷமும், கேடும் - (நிக்ரஹத்தால் வரக்கடவதான) ஸம்ஸாரமும், (ஆகியஇரண்டுக்கும் நிர்வாஹகன்) ,அவன்கண்டாய் - அந்த எம்பெருமானேயாவான் : ஐம்புலன் ஆய்-(சம்சாரமோட்சங்கட்குக் காரணமாகிய,) பஞ்சேந்திரிய வடிவானசரீரமாகி ,நின்றான் - நின்றவனும், (அந்தச்சரீரத்துக்குங் காரணமான), காற்று தீ நீர் வான் மண் - பஞ்சபூதங்களும், கருவரை - கறுத்த பருவதமும் என்ற இவற்றை (உண்டாக்குவானும்), அவன்கண்டாய்—; சென்று-(இந்தப்பிரபஞ்சத்தையழிக்கத் திருவுள்ளம்) போய், கார் ஓதம் சீற்றம் தீ ஆவானும் - கறுத்தகடலைச் சீறிச்சுடவல்ல வடவாக்கினியாகுமவனும், அவன்கண்டாய் ; (எ - று.)

இந்த ஸம்ஸாரத்தைப்ரவ்ருத்திப்பித்தவனாதலால், இந்தச் சேதநனைக் காத்தலும் அவனுக்குப் பாரமாயிற்று; ஆகவே, இவனுக்குக் கரணகளேபரங்களைக் கொடுத்துஸம்ஸாரத்தில் ப்ரவ்ருத்திப்பித்த அவ்வெம்பெருமானே தன்னைப்ரபத்திசெய்தாரைத் தன்னுடைய மாயையான ஸம்ஸாரத்தினின்று மீளச் செய்வனென்றவாறு, மூன்றுநான்காமடிகளில், 'காற்று...மண் காரோதச்சீற்றத்தீ யாவானும் அவன்கண்டாய் —; (இப்படிஸர்வநிர்வாஹகனான அவனை), சென்று - கிட்டி, உய்குவாய்என்று ஒருவினைச்சொல்கூட்டிமுடித்தலும் ஒன்று. (உ௪)

25. சென்றதிலங்கைமேல் செவ்வேதன்சீற்றத்தாற்
கொன்றதிராவணனைக் கூறுங்கால் - நின்றதுவும்



வேயோங்குதண்சாரல் வேங்கடமே விண்ணவர்தம்
வாயோங்கு தொல்புகழான் வந்து.

(இ-ள்.) விண்ணவர் தம் வாய் ஓங்கு தொல் புகழான்-தேவர்களின் வாயினால் உயர்வாகக் கூறப்படுகின்ற பழமையான புகழையுடைய எம்பெருமான், —செவ்வே - நேராக, சென்றது;இலங்கைமேல் - இலங்காபுரியின்மேலாகும் ; தன் சீற்றத்தால் - தனக்குவந்தேறியானகோபத்தால், கொன்றது—, இராவணனை கூறுங்கால் - சொல்லுமிடத்து, வந்து— (சேதநர் எக்காலத்தும் உஜ்ஜீவிக்க வேணுமென்று கருதி வந்துநின்றதுவும்—, வேய் ஓங்குதண் சாரல் வேங்கடமே - மூங்கில்கள் ஓங்கிவளர்ந்துள்ள குளிர்ந்தசாரலையுடைய திருவேங்கடமலையேயாகும் ; எ - று.)

எம்பெருமான் ஸர்வஸாதாரணனாய் நின்று ரக்ஷித்ததேயல்லாமல் ஆச்ரிதர்க்காகத் தனியே ரக்ஷிக்கும்படியை இங்கு அருளிச்செய்கின்றார். தன் சங்கல்பத்தாலேயே யழித்துவிடாமல் தன் காலாலே நடந்து சென்ற அருமையைப்பாராட்டி 'சென்றதிலங்கைமேல்' என்றது. இராவணவதத்தின் பின் பிரமன் முதலிய தேவர் தோத்தரித்ததை நினைத்து 'விண்ணவர்தம் வாயோங்கு தொல் புகழான்' என்றதாக உரைப்பினும் அமையும். (உ௫)

26. வந்தித்தவனை வழிநின்ற வைம்பூத
மைந்து மகத்தடக்கி யார்வமா - யுந்திப்
படியமரர் வேலையான் பண்டமரர்க்கீந்த
படியமரர் வாழும்பதி.

(இ-ள்.) படி அமரர் - நிலத்தேவரான ஸ்ரீவைஷ்ணவர்கள், வாழும் - நித்யவாசம் பண்ணுகின்ற, பதி - திருப்பதியாகிய திருமலையென்பது,—அமரர் - பிரமாதி தேவர்கள், வழி நின்ற - (அவ்வெம்பெருமானை ஆச்ரயிப்பதற்குத் தடங்கலாய்) நடுவே நிற்பனவான, ஐம்பூதம் ஐந்தும் - பஞ்சபூதங்களின் காரியமான (மெய் வாய் கண் மூக்கு செவி என்னும்) பஞ்சேந்திரியங்களையும் அகத்து, அடக்கி - (பராக்கிற் போகாமல்) ப்ரத்யக்காகப்போம்படி நியமித்து, அவனை - அவ்வெம்பெருமானை, (அபிமான சூன்யராய்), வந்தித்து - திருவடிகளிலே விழுந்து ஆச்ரயித்து, ஆர்வம் ஆய் - (அவ்வெம்பெருமானிடத்திலே) மிக்க அபிநிவேசமுடையவராய், உந்தி - (ஒருவரையொருவர்) தள்ளிக்கொண்டு மேல் விழுந்து, படி - (குணங்களிலே) அவகாஹிக்குமாறுள்ள, வேலையான் - திருப்பாற்கடல் நாதனான பரமன், பண்டு அமரர்க்கு - பழமையான தேவர்களாய் நித்ய ஸூரிகட்கு, ஈந்தது - அனுபவிக்குமாறு கொடுத்த தலமாகும்; (எ - று.)

திருமலையென்பது - நித்யஸூரிகளின் ஸ்தலமென்பதாம். திருப்பாற்கடல் நாதனுக்கும் திருவேங்கடமுடையானுக்கு முள்ள அபேதத்தன்மை இங்குத்தோன்றும், கீழ் திருமலை ப்ரஸ்துதமாய் வந்ததனால், அதுவே இவ்வாழ்வார்க்குப் பின்னும் ஆகர்ஷகமாக அதனிடத்துத் தமது திருவுள்ளஞ்செல்ல, அதன் வைலக்ஷண்யத்தை இந்தப்பாசுரத்தால் வெளியிடுகின்றனரென்க. படி அமரர் - வானுலகத்தில் தேவர்கள் விளங்குவது

போல இருள் தருமாஞாலமான இந்தப்பூமியில் விளங்குபவர் ; எனவே, ஸ்ரீவைஷ்ணவரென்றாயிற்று. படி - பூமி. ஈந்த - ஈந்ததென்பதன் விகாரம். (உசு)

27. பதியமைந்து நாடிப் பருத்தெழுந்த சிந்தை
மதியுரிஞ்சி வான்முகடுநோக்கிக் - கதிமிகுத்தங்
கோல்தேடி யோடுங் கொழுந்ததே போன்றதே
மால்தேடி யோடும் மனம்.

(இ-ள்.) பதி - திருமலையாகிற ஸ்தாநத்திலே, அமைந்து - வேரூன்றிநின்று, நாடி - (தன் அபிநிவேசம் தோற்றும்படி எங்கேயெங்கேயென்று) தேடி, (அந்தத் திருமலையில் தன் மனோரதம் பூர்ணமாகக்கிட்டாமையாலே), பருத்து எழுந்த - மிகவும் வளர்ந்து மேற்கிளர்ந்த, சிந்தை - மனோரதத்தை யுடையதாய், மதி உரிஞ்சி - சந்திரபதத்தையும் உராய்ந்துகொண்டு, வான்முகடு நோக்கி - (அப்பால்) அண்டமுகட்டையும் பார்த்துவிட்டு, (அங்கும் நில்லாமல்) மால்தேடி - (பரமபதத்திலே தன் மேன்மைதோன்ற எழுந்தருளியிருக்கிற) ஸர்வேச்வரனைத் தேடிக்கொண்டு, ஓடும் - செல்லுகிற, மனம்-(என்) மனஸ்ஸானது, கதிமிகுத்து - (மேன்மேற்படர்வதில்) விரைவுமிகுந்து, அம் கோல் தேடி ஓடும் - அழகிய கொள்கொம்பைத்தேடிக்கொண்டு படர்ந்து செல்லுகிற, கொழுந்து அது போன்றது - கொடியை யொத்திராநின்றது; (எ - று.)

கீழ்ப்பாசுரத்தில் எம்பெருமான் திருமலையில் நின்றருளுகின்ற இருப்பை அநுஸந்தித்த ஆழ்வார் அங்கு தாம் நினைத்தபடி அவ்வெம்பெருமானோடு பரிமாறப் பெறாமையாலே ஆற்றாமைக்கொண்டு, நினைத்தபடி பரிமாறக்கூடிய பரமபதத்திலிருக்கிற ஸர்வேச்வரனைத் தேடாநின்றது என்னுடைய நெஞ்சு என்கிறார், இந்தப்பாசுரத்தில். 'கதிர் மிகுத்து' என்பதும் பாடம். (உஎ)

28. மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான் மற்றும்
நினைப்பரிய நீளரங்கத் துள்ளா-னெனைப்பலருந்
தேவாதி தேவ னெனப்படுவான் முன்னொருநாள்
மாவாய் பிளந்த மகன்.

(இ-ள்.) எனை பலரும் - கணக்கற்ற வைதிக புருஷர்யாவரும், தேவாதிதேவன் எனப்படுவான் - நித்யஸூரிகட்கு நிர்வாஹகனை பெரியமேன்மையையுடையவனென்று ப்ரஸித்தமாகச் சொல்லப்படாநிற்பானும், (ஜகத்தை ரட்சிக்கும் பொருட்டுப் பரமபதத்தினின்று வந்து), மாகடலான் - பரப்பையுடைய திருப்பாற்கடலிலே பள்ளிகொண்டுநிற்பவனும், முன் ஒரு நாள் - முன்பு ஒரு காலத்தில், (அந்தத் திருப்பாற்கடலினின்று ஸ்ரீக்ருஷ்ணனாயவதரித்தபோது), மா வாய் - குதிரையுருக்கொண்டுவந்த கேசியின் வாயை, பிளந்த - , மகன் - சிறுபிள்ளையும், மற்றும் - பின்னும், (பிற்பாடரும் தன்னையநுபவிக்கும்படி), நினைப்பு அரிய நீள் அரங்கத்து உள்ளான் - நினைப்பதற்கும் அருமையான [சீலகுணத்தைக்கொண்டு] போக்யதை மிக்கிருந்துள்ள கோயிலிலே (ஸம்ஸாரிகளை ரட்சிப்பதற்காகவே) யோகநித்திரை செய்பவனுமாகி, வேங்கடத்தான் - திருமலையிலே (ஸர்வஸுலபனாய்க் கொண்டு) எழுந்தருளி நிற்பவன், (இப்போது), மனத்துள்ளான் - என் மனஸ்ஸிலே நித்யவாஸம் பண்ணுகின்றான்; (எ - று.)

(தொடரும்.)

186738

## திருநாம ஸங்கீர்த்தனம்.

ஸகலஜனங்களின் உஜ்ஜீவனார்த்தமாக திருமெய்யமென்று வழங்கிவரும் ஸத்யக்ஷேத்ரத்தில், அர்ச்சாரூபியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ உய்யவந்தாள் ஸமேத ஸ்ரீ ஸத்யமூர்த்திப்பெருமாள் நமக்கு செய்துவரும் உபகாரத்திற்கு க்ருதஜ்ஞதாநுஸந்தானமாய் அவருடைய திவ்யசேஷ்டிதங்களையும் திவ்ய ப்ரபாவங்களையும் தமிழில்கானரூபமாய் அநுஸந்தானம்செய்து அநுபவிக்கும்பொருட்டு ஸ்ரீ நரஸிம்ஹதாஸரால் இயற்றப்பட்ட கீர்த்தனங்கள் அடங்கியபுஸ்தகம். இதிலடங்கியகீர்த்தனங்கள் பாடுகிறவர்களுடையவும் கேழ்க்கிறவர்களுடையவும் காதுக்கு அம்ருதவர்ஷம்போலிருக்கும் - இது புதுக்கோட்டை ம. ப்ரணதார்த்திஹர அய்யர் அவர்களால், ஸெஂட்ரல் கோவபரேடிவ் பிரிண்டிங்கு ஒர்க்ஸ் என்னும் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டுள்ளது இதன் விலை அணா ¼.

## விஷய ரசமஞ்சரி.

பொதுவிஷயங்களைப் பற்றிய வியாசங்களடங்கிய இத்தமிழ்ப்புத்தகம் பர்மா போஸ்டு மாஸ்டர் ஜனரல் ஆபிஸில் தலைமைகுமாஸ்தா ஸ்தானம் வகித்துவரும் ஸ்ரீமான் ச. த். மூர்த்திமுதலியாரால் செந்தமிழ்ச் சொற்களாய்ப் பலரும் படித்து எளிதிலறியும்படி தெளிவான நடையில் எழுதப்பட்ட ஒரு வசன காவ்யம். யாதொருமதத்தையும் நிந்திக்காமலும், பூர்வகாலத்து எண்ணங்களை அடியோடு நிராகரிக்காமலும், நவீனச்சீர்திருத்தத்தின் ஸம்பந்தமான கொள்கைகளை முழுவதும் தழுவாமலும், நடுவுநிலைமையிலிருந்து தன்னுடைய அநுபவத்தை ஒட்டிப் பொதுஜன நன்மையை நாடி எழுதி உள்ளார். இது சிறுவர் சிறுமிகளுக்கு மிகவும்உபயோகமானது. இதன் விலை ரூபா. 1—0—0 வேண்டுவோர் இரங்கூனிலுள்ள மங்குமாரிவீதி 111 நெ. வீட்டிலுள்ள புஸ்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## இராமேச்வரம் தேவஸ்தானம் ஸம்ஸ்க்ருத காலேஜ் மதுரை.

இந்தக்காலேஜின் 8 வது வருஷாந்த அறிக்கைவரப்பெற்றோம். சென்றவர்ஷத்தில் உண்டான அபிவ்ருத்தியைக் காட்டுவதுடன் இந்தகாலேஜால் செய்யப்பட்டுவரும் நன்மையைநன்குஎடுத்துரைக்கிறது. ஸம்ஸ்க்ருதகாலேஜுக்குத்தகுதியான கட்டடம், ஸந்நிவேசம், பிள்ளைகளுக்குசிறுபிராயத்திலேயே நித்யகர்மாநுஷ்டானத்தில் அபிருசி உண்டாகி அதைவிடாமல் செய்துவரும்பொருட்டு, காலை ஸமிதாதானம் ஸூர்யநமஸ்காரம், ஸாயம் ஸமிதாதானம் ஸஹஸ்ரநாமஜபம்கட்டாயமாய்அநுஷ்டிக்கப்பட்டுவருவதைப்பார்தால்இந்தவித்யாலயம் ஒரு பெரிய குருகுலம்போலிருக்கிறது. இதில் சாஸ்த்ரபாடம் சொல்லிவைப்பதுடன் ருக்யஜுஸ்ஸாமவேதங்கள்,நாலாயிரதிவ்யப்ரபந்தம், அத்யயனம் செய்யப்பட்டுவருகின்றன. ஆகமசாஸ்த்ரங்களும் சொல்லிக்கொடுத்துசிவாலயங்களுக்குநல்லகுருக்களாக தயார்செய்கிறதுமிகவும் சந்தோஷிக்கத்தக்கது. இவ்வளவையும் ஏற்பாடுசெய்து பரிஷ்காரமாய் நடத்திவரும் பிரின்ஸ்பால் வித்யாநிதி ஸ்ரீ. உ. வே. க்ருஷ்ணமாசாரியார்ஸ்வாமிக்கு ஸம்ஸ்க்ருதாபிமானிகள் மிகவும் க்ருதஜ்ஞதை உள்ளவர்களாக இருக்கவேணும்.

## விஜ்ஞாபனம்.

தீபிகைக்கு வியாஸங்கள், கடிதங்கள், சந்தா, விலாஸமாறுதல்கள், இன்னும் தீபிகை, ஸபை விஷயமாய்த் தெரிந்துகொள்ள வேண்டிய விபரத்துக்கு ஆகும் கடிதங்கள் எல்லாம் ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ஸபையின் கார்யதர்சிக்கு (2/11 ஆதியப்பமுதலி தெருவு, புரசைவாக்கம், வேப்பேரி போஸ்டு) என்ற விலாஸத்துக்கு அனுப்பவும்.

பழைய ஸஞ்சிகைகள் அடங்கிய புஸ்தகங்கள் ஸ்வல்பமாயிருப்பதாலும், தேவை ஜாஸ்தியாயிருப்பதாலும், வேண்டியவர்கள் தாமஸமன்னியில் எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

கார்யதர்சி.

## ஸ்ரீமைலாப்பூர் வேதபாராயண ஸபையின் 1922 வருஷத்திய ரிபோர்ட்டு.

இச்சபை 18 வருஷங்களுக்கு முன் ஏற்பட்டு, ப்ரதி வருஷமும் மைலாப்பூரில் ஸ்ரீதேசிகன் உத்ஸவத்தில் வேதபாராயணம் செய்யும் ஸ்வாமிகளை உபசரித்தும், பண்டித ச்ரேஷ்டர்களைக் கொண்டு ஸத்ஸம்ப்ரதாய ஸம்பந்தமான உபந்யாஸங்களைச் செய்வித்து வருவதும் வெகுவாய் ப்ரஸித்தங்களே. ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் வேதபாடசாலை யொன்று ப்ரத்யேகமாக நடந்து வருவதும்தவிர சென்ற ஸம்வத்ஸரத்தில் அங்கு ஒருபுஸ்தகசாலை யொன்றும் துவக்கப்பட்டது. இந்த ஸபையாரும் தங்கள் க்ருஷிகளில் இவற்றையும் சேர்த்துக்கொள்ள உத்தேசிப்பதாக ஷை ரிபோர்ட்டினால் தெரியவருகிறது. உத்ஸவத்தில் கைங்கர்ய பரர்களுக்கும் மற்றவர்களுக்கும் ததீயாராதனம் சிறப்பாக நடந்திருக்கிறது. ஆஸ்திக்யம் மிகவும் குறுகிவரும் இக்காலத்தில் பாகவத ஆராதன விஷயத்தில் இச்சபையாருக்கு ப்ரீதியுடன் அநேகர் ஸஹாயம் செய்வதைக் கேட்க மிகவும் ஸந்தோஷிக்கின்றோம்.

பாடசாலை, புஸ்தகசாலைகளுக்காகக் கட்டடமாய் ஸபையார் ஒரு பூமியைவாங்கியிருப்பது ச்லாக்யமே. ஆத்மோஜ்ஜீவனத்துக்காக ஸ்ரீதேசிகன் செய்தருளிய அஸாதாரணமான க்ருஷிகளைப் பார்த்தால் அவர் திவ்ய ஸூக்திகளைப் படிப்பித்து ப்ரசாரம் செய்வித்து அத்யாத்ம ஜ்ஞானத்தைப் பரவச்செய்வதே அம்மஹானும், 'ந ச தஸ்மாந் மநுஷ்யேஷு கஶ்சிந்மே ப்ரியக்ருத்தம: ||' (இப்படிச் செய்பவனைக் காட்டிலும் எனக்கு எல்லாரிலும் ப்ரியமான மனுஷ்யன் கிடையாது) என்று ஸ்ரீகீதாசார்யனும், மிகவும் உகந்த கைங்கர்யங்க ளென்னத்தட்டில்லை. இந்த ஸபையின் நிர்வாஹத்தை உத்ஸாஹத்துடன் நடத்திவரும் அதன் அத்யக்ஷரான ஸ்ரீமான் பி. என். ஸ்ரீநிவாஸாசார்யர் எம். ஏ. ஸ்வாமியும் இதர அங்கத்தினர்களும், இவ்வம்சத்தில் ப்ரதானமாகக் கவனத்தைச் செலுத்துவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.